உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்.— { ரா. இராகவையங்கார், ஸேது ஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-௨.] குரோதிஹ வைகாசிமீ [பகுதி-எ.

உள்ளுறை.

ஒளவையார்.—பத்திராசிரியர். உஉங
நடுவெழுத்தலங்காரக்கவி.—அ. குமாரசுவாமிப்பிள்ளை. உஙச
சிலதமிழ்ச்சொல்வழக்காறு.—ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை உஙஎ
ஆகுபெயரன்மொழித்தொகை ஆராய்ச்சி.— } நா. வேதாசலம்பிள்ளை. உச0
நுண்பொருட்கோவை.—அ. சண்முகம் பிள்ளை. உசரு
கடவுள்.—ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர். உருக
சிலப்பதிகாரமணிமேகலைக ளின்பிறப்பிடம் யாது?— } தா. பொன்னம்பலம்பிள்ளை. எம். ஆர். ஏ. எஸ். உருரு
கவிமரபு.—சுந்தரராஜசர்மா. உ௬0
புத்தகக்குறிப்பு.—பத்திராசிரியர். உ௬ங
திருச்செந்திற் கலம்பகம்.— (சுவாமிநாததேசிகர் இயற்றியது) } சேற்றூர்ச்சுப்பிரமணியக் கவிராயர் பரிசோதிப்பது. க
விவசாயரசாயனசாஸ்திரச்சுருக்கம்.—சே. ப. நரசிம்மலுநாயடு. ௬ரு
திணைமாலை நூற்றைம்பது.—கணிமேதாவியார். ஙஎ

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ - 4.] 1904. [தனிப்பிரதி அணா-8.

உ

திருச்சிற்றம்பலம்.

முக்கிய அறிவிப்பு.

நம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் கிளைகளுள் ஒன்றாகிய "பாண்டியன் புத்தகசாலை"யின் பெருக்கத்தைக்குறித்து, இலங்கைத் தீவிற் கிடைக்கும் ஏடுகளைக் கூடியவரைசேர்த்துச் சங்கத்துக்கு அனுப்புவதாகக் கொழும்பு ஆடிட்டர் ஆபீஸ் ஸ்ரீமத்–V. J. தம்பிப்பிள்ளையவர்கள் அன்போடும் சம் மதித்திருப்பதால், அத்தீவைச் சார்ந்தநாடுகளிற் பழைய ஏடுகளுடைய நல் லோர், தமிழ்ப்பாஷாபிவிர்த்தியைக் கருதித் தங்கள்பாலுள்ள பிரதிகளை மேற்குறித்த பிள்ளையவர்கள் மூலம் சங்கத்துக்கு அன்போடும் அனுப்பி வருமாறு இதன் மூலம் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,

பொ. பாண்டித்துரை,

அக்கிராசனாதிபதி,

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

மாணாக்கர்க்கு அறிவிப்பு.

நம் தமிழ்ச் சங்கத்தாரால் 1903ஞு நவம்பர் டிசம்பர் மாதங்களில் நடத்தப்பெற்ற மெட்ரிகுலேஷன், எப். ஏ., பீ. ஏ. வகுப்புப் பரீக்ஷைகளிற் றேறிய மாணாக்கர்க்குச் சங்கத்தார் அளிக்கும் யோக்கியதா பத்திரங்களை, விடுமுறை நீங்கிக் கலாசாலைகள் திறந்தபிறகு, அவ்வக்கலாசாலைத் தலைவர் கள் மூலம் உரியவாறு அனுப்பப்பெறும் என்பதை இதன் மூலம் தெரி விக்கின்றேன்.

இங்ஙனம்,

எம். வி. சுப்பிரமணிய ஐயர்,

மதுரைத் தமிழ்ச் சங்க மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௨.] குரோதி௵ வைகாசி௴ [பகுதி-௭.

ஔவையார்.

(௨௦௫-ம் பக்கத்தொடர்ச்சி.)

இதற்கிடையில் தமிழ்மூவேந்தரும் தம்மினுமேம்பட்ட வண்புகழுடையனாதலால் அழுக்காறுகொண்டு பாரி என்னும் வள்ளற்றலைவனோடு பகைத்து அவனது பறம்பாகிய மலையரணை நெடுங்காலமுற்றியும் பாரியின் போர்வலியாலும் அவனுக்குபிர்த்துணைவராய்ச் சிறந்த கபிலரின் சூழ்ச்சியாலும் அவர்க்கு வெல்லற் கரிதாகவும் அவனை வஞ்சித்துக்கொல்ல, அக்காலத்து ஆண்டிருந்த கபிலர் அப் பாரிபால் வைத்த பேரன்பினால் துணைபின்றிக் கழிந்த அவனது அருமை மகளிரை அப்பறம்பினின்று கூட்டிக் கொண்டு அக்காலத்து வேளிருட் சிறந்த இருங்கோவேள் முதலியோர்பாற் போய் இவர்களை மணஞ் செய்துகொள்ள வேண்டியும், மூவேந்தர்க்கும் பாரிக்கு நிகழ்ந்த பகைமைபற்றி அவர்கள் உடம்படாமையால் அம்மகளிரைத் தமக்கினிய பார்ப்பார் சிலரது பாதுகாப்பில்வைத்து அப் பாரியின் பிரிவாற்றாது வடக்கிருப்பாராயினர். இது தெரிந்த ஔவையார் மேனிகழ்ந்தவற்றிற்கு மனநொந்து அப்பாரி மகளிரிருந்த திருக்கோவலூர்க்கட்புக்கு அம்மகளிரைக் கண்டு அவர்கட்கு நேர்ந்த பெருந்துயர்க்கு மிகவும்வருந்தி அவர்கள் அன்றிரவு தமக்கு இலைக்கறியிட அதனை யுண்டு மகிழ்ந்து,

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறையிட்டுப்—பொய்யே
யடகென்று சொல்லி யமுதத்தை யிட்டாள்
கடகஞ் செறியாதோ கைக்கு (தமிழ் நாவலர் சரிதை.)

என்னும் பாடலைப்பாடி, அவர்கள் ஒரு நீலச்சிற்றுடை கொடுக்க அப்போது 'பாரிபறித்த கலனும்' என்னும்வெண்பாவினைப்பாடி, அவர்களை நன்னிலையினிறுத்துங் கவலையேபெரிதுடையராய், ஆண்டிருந்த தெய்வீகனென்னும் அரசனொருவனை இவர்களை மணம் புரியும்படி வேண்டி உடம்படுவித்தனர். இவ்வரியபெரிய பணத்திற்குத் தாம் பெற்ற தெய்வத் தன்மையால் வேண்டுவன அனைத்தும் உளவாக்கி மூவேந்தர்க்கும் பாரிகுடிக்குமுள்ள பகைமையும் போக்கி அம்மூன்றரசரையும் தம்மறிவின் வலியாற் கோவலூர்க்கண் வரவழைத்து அப்பாரிமகளிரது திருமணத்தைச் சிறப்பவியற்றினர். இவ்வௌவையாரால் இப்பாரிமகளிர்மணம் சிறப்பநிகழ்த்தப் பெற்றமைபறியப்படுதலான், 'கபிலர் பாரிமகளிரைப் பார்ப்பார்ப் படுத்தனர்' என்பது, அவர் அம்மகளிரைப் பார்ப்பாரது பாதுகாப்பின் வைத்தமையே குறிக்கும். இப்பெருமணத்து ஔவையார் பனந்துண்டம் பழுந்தரவும், பெண்ணையாறு நெய்பால் தலைப்பெய்துவரவும், வானம் பொன்மாரி பொழியவும் பாடித் தமது தெய்வவாக்கின் வலிமை யுணர்த்தின ரென்ப. பெண்ணையாறு இவர் பாடலுக்கு நெய்பால் தலைப்பெய்து வந்த கதை வில்லிபுத்தூரர் மகனார் வரந்தருவாரானும்,

ஔவைபா டலுக்கு நறுநெய்பால் பெருகி
    யருந்தமி ழறிவினுற் சிறந்து
தெய்வமா நதிநீர் பரக்குநா டந்தத்
    திருமுனைப் பாடிநன் னடு.

என்பதனுன் எடுத்தாளப் பட்டுள்ளமை தேறுக. இவற்றையெல்லாம்

தமிழ் நாவலர் சரிதையில் .

ஔவையார் அங்கவை, சங்கவையைத் தெய்வீகனுக்குக்கல்யாணம் பண்ணுவிக்கிற போது ஓலையெழுத விநாயகனை அழைத்த வெண்பா.

ஒருகை யிருமருப்பு மும்மதத்து நால்வாய்க்
கரியுருவக் கங்காளன் செம்மல்—சரிமுகவன்
கண்ணுலவோலை கடிதெழுத வாரானேற்
றன்னுண்மை தீர்ப்பேன் சபித்து.

சேர சோழ பாண்டியர்க்கு விநாயகன் எழுதப் பாடிய வெண்பாக்கள்.

சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவ
லூரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமக
ளங்கவையைக் கொள்ள வரசன் மனமியைந்தான்
சங்கியா தேவருக தான்.

புகார்மன்னன் பொன்னித் திருநாடன் சோழன்
றகாதேன்று தானங் கிருந்து—நகாதே
கடுக வருக கடிக்கோவ லூர்க்கு
விடியல் பதினெட்டா நாள்.

வையைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதேன்று தேம்பாதே—தையற்கு
வேண்டுவன கொண்டு விடியல்பதி னெட்டாநா
ளீண்டு வருக வியைந்து.

மூவரும் வந்தபோது பனந்துண்டத்தைப் பாடியது.

திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனு
மங்கைக் * கறுகிட வந்துநின் ருர்மணப் பந்தரிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.

அந்தக் கல்யாணத்திற் பெண்ணையாற்றைப் பாடியது.

முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திவரு நெய்பா றலைப்பெய்து—குத்திச்
செருமலைத்தெய் வீகன் றிருக்கோவ லூர்க்கு
வருமளவிற் கொண்டோடி வா.

அப்போது வருணனைப் பாடியது.

கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவற்—பெருமணத்து
நன்மாரி தாழ்க்கொண்ட நன்னீ ரதுதவிர்த்துப்
பொன்மாரி யாகப் பொழி.

* அறுகிடுதல்—ஓர்மணவினை.

எனவருவனவற்றானுணர்க. இவற்றால் அங்கவை சங்கவையென்பார் பாரிமகளிர் என்பதும், அம்மகளிர் திருக்கோவலூரில் தெய்வீகன் என்னும் அரசனுக்கு மணஞ்செய்யப்பட்டனரென்பதும், இம்மணம் ஔவையாரது அறிவின்மாட்சியாலும் தெய்வத்தன்மையாலும் சிறப்ப நிகழ்த்தப்பட்டதென்பதும், ஔவையார் மூவேந்தரையும் இம்மணத்திற்கு 'உட்காது' 'நகாது' 'செய்யத்தகாதென்று தேம்பாது' வருக என்றழைத்தமையாற்பாரிகுடிக்கும்அவ்வேந்தர்க்கும் உளதாகிய பழையசெற்றம் போக்கிவருக என்றனரென்பதும், செயற்கரியன பலசெய்தனர் என்பதும், பிறவும் ஆராய்ந்தறிக. ஔவையார் இத்திருக்கோவலூர்ப் பெருமணத்திற்குப்பின் யாண்டுச்சென்றனரென்பது நன்குணரப்படவில்லை. சோணாட்டுத் திருத்தருப்பூண்டிச் சேகரத்து திருக்கடிக்குளம், திருவிடும்பாவனம் இவற்றுப்புறத்து வளவனாற்றின்கீழ்கரையில் துளசியார்பட்டினம் என்ற ஊரில் இவ்வௌவையார் திருப்பெயரான் ஒரு சிறிய பழைய கோயிலிருப்பது கேட்கப்படுதலால் * இவர் ஆண்டுப்போய் விண்ணுலகெய்தினரோ என ஊகிக்கப்படுகிறார்.

* ஔவையார் கோவில் வளவனாற்றின் கீழ்கரையில் துளசியார்பட்டினம் என்ற ஊரிலுள்ளது. அவ்வூர் திருக்கடிக்குளம், திருவிடும்பாவனம் என்ற ஊருக்குக் கீழ்த்திசையில் ஒருமைல் தூரத்துள்ளது. தஞ்சைஜில்லா திருத்தருப்பூண்டித் தாலூகாவைச் சார்ந்தது. அக்கோவிலில் ஔவையார் விக்கிரகமானது விருத்தாப்பியவடிவாய்த் தனங்கள்சரிந்து முகந்திரைந்து விளங்குகிறது. அதனுடன் இளம்பெண்ணுருவமான விக்கிரகமும் ஒன்றிருக்கிறது. அதை உப்பை என்கிறார்கள். இக்கோவிலுக்கு ஔவையார் மானியமென்று சில நிலங்களும் பாத்தியங்களும் உள. கோவிலிற் பிற்காலத்தில் விசுவலிங்கப் பிரதிட்டை நிகழ்ந்துள்ளது. அவ்விலிங்கம் ஔவையார் விக்கிரகமிருந்த இடத்திலிப்போது வைக்கப்பட்டுள்ளது. அது தெற்குப்பார்த்த ஸந்நிதி: ஆதிசைவரால் இரண்டுகால பூஜை நடைபெறுகிறது. ஔவையார் விக்கிரகத்தைப் பெயர்த்து மற்றொரு பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. கோவிலுக்கு வடமேற்கில் அரைமைல்தூரத்தில் கொல்லன் திடல் என்று ஒரு மேடு இருக்கிறது. அதன்கண் ஓராலமரமும் ஒரு மேடையும் உள்ளன. அங்கு ஔவையாரைப் பிரார்த்தித்து இஷ்டசித்திகளைப் பெறுபவர்களாற் பச்சைபரப்புதல் மிருதியாக நடைபெறுவது. அம்மேட்டிற் கொல்லன் ஒருவன் வீடுகட்டியிருந்தனனாகவும், அவ்வழியாக ஔவை

இனி இவர் ஒரூர்க்குச் செல்லும்போது இடைவழியில் வெயிலால் வியர்த்து வாடித் துவரப்பசித்து உணவின்றி வருந்தினராக, ஆங்குச்சென்ற ஆட்டிடையன் ஒருவன் அசதி என்பான், தானுண்டற்குக் கருதிக்கொணர்ந்துள்ள தெண்ணீரடுபுற்கையை இவர்க்குதவினன்; அந்நன்றி பாராட்டி அவன்மேற் கோவைநூலொன்றுபாடிச் சென்றனரென்ப. இவர் அசதிமேற் கோவைபாடினர் என்பது,

'பன்னு மசதியன்பு பாராட்டிக் கோவைநூல்
சொன்னளே யௌவைமுன்பு சோமேசா'

என்னும் முதுமொழி வெண்பாவினுலறியப்படும்.

(அசதிக்கோவை.)

அற்றாரைத் தாங்கிய வைவே லசதி யணிவரைமேன்
முற்று முகிழ்முலை யெவ்வாறு சென்றனண் முத்தமிழ்நூல்
கற்றார் பிரிவுங்கல் லாதா ரிணக்கமுங் கைப்பொருளொன்
றற்றா ரிளமையும் போலே கொதிக்கு மருஞ்சுரமே.

இவ்வாறு எளியரும் வலியரும் இவர்க்குதவி, இவராற்பெற்ற இனியபாடல்கள் மிகப்பலவாம். இவரது செவ்விய நா ஒருவரைச் செய்யாகூறிப்புகழ்தலை ஒருபோதும் அறியாதாகும். அறிவும் புகழுமுடைய மூன்றுபெருங்கோக்களும், அவரிளங்கோக்களும், அன்பும் அருமையும் உடைய பெருவள்ளல்களும், நல்லுபகாரிகளுமே இவரது

யார் மழையானனைந்து பசித்துவந்தாராக அவ்வூரார் ஒருவரும் இவரை ஆதரியாமற்போக, அக்கொல்லன் தன் உலைக்களத்து நெருப்பால்அவர் புடவையினை உலர்த்தி அவரையும் குளிர்காயச்செய்து அவர்க்கு உணவுமளித்தனனென்றுங் கூறுவர். அக்காலத்து வெள்ளம்மேலிட்டு ஊரெல்லாம் பரவியது: அப்போது இவனிடத்துண்டாய அன்பின் மிகுதியால் ஔவையார் "வள்ளையுங் கொள்ளையாகி வளவனும் பேராறுகிக், கொல்லன் றிடலொழியக் கொள்ளாய் பெருங்கடலே" என்றுபாடி அக்கொல்லன் றிடல்மட்டில் வெள்ளங்கொள்ளாமற் காத்தனர் என்பர். இதற்குச்சான்றாக இப்போதுஞ் சதுரமைல் நாலுக்கு எங்கும் வெள்ளமாகவே இருப்பது பார்க்கலாம். கடல் இக்கோவிலிருக்குமிடத்திற்குப் பத்துமைல் தூரத்துள்ளது. இவை மன்னார்குடிக் காலேஜுத் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ சருக்கரை-இராமசாமிப் புலவர் வாயிலாற்றெரிந்தன.

திருப்பாடல் புனைந்தவராவர். இவரை ஒருகாற் சில புல்லறிவோர் தம்மைப் பாடுக என்றபோது இவர்,

மூவர் கோவையு மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவலா னெம்மையும்
பாடுக வென்றனிர்
நும்மையிங் கெங்ஙனம் பாடுகென் யானே
களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர்
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர்
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கீ
ரிலவு வாய்ச்சிய ரிளமுலை புல்லீ
ரவிச்சுவை யல்லது தமிழ்ச்சுவை தெருளீர்
ருடீஇ ருண்ணீர் கொடீஇர் கொள்ளீ
ரொவ்வாக் கானத் துயர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே.

எனப்பாடியதனுனே இவரது அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்துத் திட்பமும் ஒட்பமும் நன்கறியத்தகும். "செம்பொருளாயின் வசையெனப்படுமே" என்னுஞ்செய்யுளியற் சூத்திரவுரையிற் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் எடுத்துக்காட்டிய 'எம்மிகழ்வோர வர் தம்மிகழ்வோரே' என்னும் பாட்டு, ஔவையார் ஒருவனைப் பாடி, அவனிகழ்ச்சிசொல்ல, அப்போதுபாடிய அங்கதஅகவல்' என்னுந் தலைப்பின்கீழ்த் தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படுவது. இதனுனும் இவரது மனவலியுஞ் சொல்வலியும் ஆராயப்படும். இவர் பாடியருளிய,

எரு மிரண்டுள தா யில்லத்தே வித்துள தாய்
நீருருகே சேர்ந்த நிலமுமா—யூருக்குச்
சென்று வரவணித்தாய்ச் செய்வாருஞ் சொற்கேட்டா
லென்று முழவே யினிது. (தமிழ்நாவலர்சரிதை.)

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காதலிருவர் கருத் தொத்துற்—றாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. (ஷ)

ஒன்ருகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்ருன்றன் வீர மேவீர—மென்ருனுஞ்
சாகாமற் கற்பதே கல்வி தனைப்பிற
ரேவாம லுண்பதே யூண். (ஷ)

அரியது கேட்குந் தனிநெடு வேலோய்
மக்கள் யாக்கையிற் பிறத்தலு மரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையு
மூங்கையுஞ் செவிடுங் கூனுங் குருடும்
பேடு நீக்கிப் பிறத்தலு மரிதே
பேடுநீக்கிப் பிறந்த காலை
ஞானமுங் கல்வியு நற்குற லரிதே
ஞானமுங் கல்வியு நற்குறு மாயினுந்
தானமுந் தவமுந் தரித்தலு மரிதே
தானமுந் தவமுந் தரித்தார்க் கல்லது
வானவ ஞடு வழிதிற வாதே. (ஷ)

என்னும் பாடல்களான் இவரது அரிய பெரிய மனநிலை நன்குணரப் படும்.

இவர் சேரமண்டலஞ் சோழமண்டலம் பாண்டியமண்டலம் தொண்டைமண்டலம் நான்கிலும் அவற்றின் றலைநகர்களிலும் நெடுங் காலஞ் சரித்தனரென்பதும் இவர்காலத்துத் தொண்டைநாட்டிற்சான் ருேர் பலரிருந்தனர் என்பதும் இவர்பாடியருளிய,

‘வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
றென்ஞடு முத்துடைத்து தெண்ணீர் வயற்ருெண்டை
நன்ஞடு சான்ருே ருடைத்து.’

‘வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்ற
ஞன்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது.’

என்னும் பாடல்களான் அறியப்படுவன. இவை ஔவையார் பாடியன என்பது,

அஞ்சொன் முதுதமிழ் நால்வேந்தர் வைகு மவையிலௌவை
செஞ்சொற் புனைகின்ற வேளாளர் வைகுஞ் சிறப்புடைத்தால்
விஞ்சிய வேழ முடைத்தென்னும் பாடல் விளம்பிப்பின்னும்
வஞ்சி வேளிய வெனும்பா மொழிதொண்டை மண்டலமே.

எனவருந் தொண்டைமண்டல சதகச் செய்யுளானுந்தெளியப்படும். நச்சினர்க்கினியர் 'வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்' என்னுஞ் சூத்திரவுரையில் "வஞ்சிவெளிய குருகெல்லாம்......காக்கைகரிது" "கறைப்பற் பெருமோட்டு.........கூர்ங்கத்திகொண்டு" இவை ஔவையுங், காரைக்காலம்மையுங் கூறியன" எனக்கூறியதனுனு மிதனை யுணர்க.

இனித் தமிழ்நாவலர் சரிதைக்கண் 'பொய்யாமொழியார் பாதியும் ஔவையார் பாதியுமாகப் பாடிய வெண்பா' என்னுந் தலைப்பின் கீழ்,

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணா வதுஞ்சோழ மண்டலமே—பெண்ணவா
ளம்பர்ச் சிலம்பி யரவிந்தத் தாளணியுஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

என ஓர் பாட்டுக்காணப்படுவது. இஃது அம்பர்நகரத்திருந்த சிலம்பி என்பாளொருத்தியைப் புகழ்ந்து பாடியதாகும். இதனுன் இவ்வெளவையார் பொய்யாமொழியார் காலத்தும் இருந்தனரென்பது அறியப்படுவது. பொய்யாமொழியார் சங்கம் ஒழிந்த காலத்தை அடுத்திருந்த புலவரென்பது அவர் சங்கப்பலகை மிதப்பப்பாடிய,

பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித. (தமிழ்நாவலர் சரிதை)

என்னும் பாடலான் ஊகித்தலாகும். இப்பாட்டின்கண் உள்ள 'மதுராபுரித் தமிழ்' என்னுந் தொடர் இவர்பாடிய 'மதுரா புரித்தமிழ் தேர்வாணன் மாறை வனத்துவந்தே' என்னும் வாணன்கோவையினும் பயின்றமை காண்க. கடைச்சங்கம் உக்கிரப்பெருவழுதி இறந்த

போது ஒழிந்ததாகும். ஔவையார் உக்கிரப்பெருவழுதி காலத்தும் அவனுக்குச் சிறிது முற்பட்ட அதிகமான், பாரி என்னும் வள்ளல்கள் காலத்தும் இருந்தனரென்பது முற்காட்டிய இவரது பாடல்களான் நன்கறிந்தது. இவற்ருல் அதிகமான் காலமுதல் பொய்யாமொழியார் காலம்வரை ஔவையார் இருந்தாராக விளங்கும். மக்கள்யாக்கைக்குப் பேரெல்லையாயுள்ள யாண்டு நூறும் ஔவையார் புக்காராகக்கொண்டு,உக்கிரப்பெருவழுதி துஞ்சுவதற்குமுன்னர் முப்பதியாண்டும்,துஞ்சியபின்னர் எழுபதியாண்டும் இருந்தனராகக்கருதி இவ்வௌவையாரதிறுதிக்காலத்துப் பொய்யாமொழியார் இருந்தனரெனக்கூறுதல் பொருந்திற்ருகும். இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனர்காலத்து வள்ளல்கள் எழுவரும் மாய, வஞ்சி, மதுரை, உறந்தை என்னும் மூன்று தலைநகர்களும் வறியவாயொழிந்தன என்பது சிறுபாணாற்றுப்படையாற் புலப்படுவது. அவ்வாறே பெருஞ்சித்திரனர் காலத்தும் வள்ளல்கள் எழுவரும் மாய்ந்தனரென்பது அவர்குமணனைப்பாடிய புறப்பாட்டான் (கருஅ) அறியப்படும். இவற்ருல் வள்ளல்கள் எழுவர்க்குப் பின்னர் வஞ்சி, மதுரை, உறந்தை இந்நகர்கள் வறியவாயொழிந்ததன்மேலும், நல்லிசைப்புலவர் பலருளராயினர் என்பதுந்தெளியப்படும். இவர்களுடன் ஔவையாரும் இருந்தனராவர். பொய்யாமொழியார் காலத்தை இறப்பப் பிற்பட்டதெனக்கருதி, ஔவையார் காலத்தை உலகியற்குமாருக நெடிது நீட்டித்தலினும் பொய்யாமொழியார் காலத்தையே முற்பட்டதெனக்கோடல் மீண்டைக்கியைபுடைத்தாகும். அப்பொய்யாமொழியாரது செய்யுள்வழக்கினை உற்றுநோக்கினும் இதுவே புலனுகும். தமிழ்நாவலர் சரிதையுடையாரும் 'ஔவையார்பாதியும் பொய்யாமொழியார்பாதியுமாகப்பாடியது' எனக்கூறுதலானும் ஔவையாரையடுத்தே பொய்யாமொழியாரை வைத்தோதுதலானும்இதனுண்மையறியலாகும். இருவரும் முருகவேள்கேட்கப் பாடுதலானும், கோவை பாடுதலானும், ஒற்றுமையுடையராதலுங் காண்க. பண்டைத்தண்டமிழ் நூல்களையே பெருந்துணையாக் கொண்டு நன்காராய்ந்தமட்டில் இவர் பொய்யாமொழியார் காலத்துக்கும் பிற்பட்டிருந்தனரென்பது சிறிதும் புலப்படவில்லை. இனி இவர் அதிகமான்பால் நெல்லிப்பழம் பெற்றபோது "சாதனீங்க வெமக்கீத்தனையே" எனவும் "வன்கூற்

றை நாவையறுப்பித்தாயாமலகந்தந்து" எனவும் பாடுதலானும் தத்துவங்கூறியபோது "ஒன்றானுஞ்சாகாமற்கற்பதே கல்வி" என வுரைத்தலானும் இவர்சாகாமனெடுங்காலம் வாழ்ந்தனரெனக்கூறுப. மற்றுந் தமிழ்நாவலர் சரிதையில் 'சேரன் கயிலைக்குப்போகிறபோது ஔவையாரை அழைக்க, அவர் விநாயகபூசை பண்ணித் தாமதமாயிருக்க,விநாயகன் அன்று துதிக்கையாலேஎடுத்துக்கயிலையில் விடச் சேரனைக்கண்டு பாடியது, என்னுந் தலைப்பின்கீழ்,

மதுர மொழியி னுமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினையவல் லார்க்கரி தோமுகில் போன்முழங்கி
யதிர வருகின்ற யானையுந் தேரு மதன்பின்வருங்
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே.

என்னும் பாடலொன்று காணப்படுவது. இதன்கட் கூறப்பட்ட சேரன், சேரமான்பெருமாணுயனுர் என்ப. இக்கதை பேரியபுராணத்துக் காணப்பட்டதில்லையாதலின், இதனுண்மை எம்மனோராலறியலாவதில்லை. இவற்றதுண்மை எவ்வாறாயினும் இவையெல்லாம்இவர் இறப்பமுதியோராய் நெடிதாயுளிருந்தனரென்பதுமட்டில் நன்குணர்த்துவதாகும். யாப்பருங்கல விருத்திகாரர் "மிக்குங்குறைந்தும்" என்னுஞ் சூத்திரவுரையில்,

உடையராச் சென்றக்கா லூரெல்லாஞ் சுற்ற
முடவராக் கோலூன்றிச் சென்றக்காற் சுற்ற
முடையானும் வேறு படும்.

என்னும் பாடலை ஔவை பாட்டென்றுகொண்டு, ஆரிடப்போலிக்கு எடுத்துக்கூறினர். இதனானும் ஔவையார் இறப்பமுதுமையெய்தியிருந்தனரெனவும், அக்காலத்துத் தம் இளமையிற் போலத் தாங்குவாரின்றித் தளர்ந்தன ரெனவும் ஊகிக்கத்தகும். இவரது நெடிதாயுட் காலத்து இவர்திருவாய்மலர்ந்தருளிய பாடல்கள் எண்ணிறந்தனவாம். அவற்றுள் ஒரு சிலவே இப்போது உளவாவன. அவை நற்றிணையினும் குறுந்தொகையினும் நெடுந்தொகையினும் புறநானூற்றினும் தமிழ்நாவலர் சரிதையினும் தொகுக்கப்பட்டன சிலவும், தொல்லுரையாசிரியர்களா லாங்காங்கு மேற்கோள் காட்டப்பட்டன சிலவும், அசதிக்கோவையிற் சிலவும், மூதுரை முப்பதும்,

* 'அறஞ்செயவிரும்பு,' 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பன முதலாகவரும் அறவுரைகளும், பிறவுமாம். இவரது திருப் பாடல்கள் நற்றிணையிற் கோக்கப்பட்டவாற்றாற் பன்னாடுதந்த பாண்டியன் மாறன் வழுதியாலும், குறுந்தொகையிற் கோக்கப்பட்ட வாற்றாற் பூரிக்கோவாலும், நெடுந்தொகையிற் கோக்கப்பட்டவாற் றால் உக்கிரப்பெருவழுதியாலும் உருத்திரசன்மராலும் பெரிதும்

‡ இஃது இக்காலத்து ஆத்திசூடி என வழங்குவது. இச்சங்கத்திற்குக் கிடைத்த உரையொடுகூடிய இந்நூற் பழைய ஏடொன்றில் இதுவே கோன் றைவேய்ந்தோன் என்னும் பெயரான் வழங்கப்பட்டு முள்ளது. இந்நூல் முக த்தே தான்,

கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோம் யாமே.

என்னும் கடவுள் வாழ்த்து எழுதப்பட்டு உரை கூறப்பட்டுள் ளது. இந்நாலிறுதியில்

கொன்றைவேய்ந் தோனுரையைக் கொன்றைவேய்ந் தோனருளா
னின்றமிழார் வேந்த ரிருங்குழுவே—யொன்று
மறியா துரைத்தே னவையா ருரையாற்
பிறியாத நார்ப்பூப் பிணை.

என்னும் வெண்பா வொன்றுள்ளது. அதன்பின் அன்னையும் பிதாவும் என்னும் பெயரில் இக்காலத்துக் கொன்றைவேந்தன் என வழங்கும் நூல் உரையுடன் எழுதப்பட்டுள்ளது. அதன்றலைப்பில்,

அன்னையும் பிதாவு மென்னு முன்னுரைப்
பெயருடை நூற்கும் பெயர்த்துரை யுரையென
நல்லோர் சொல்லு நல்லுரை கேட்டு
சொல்லெனச் சொலுஞ்சொற் கிள்ளை போல
வல்லவர் முன்னுரை வழங்குவன் மாதோ.

என்று வரையப்பட்டுள்ளது. இந்நூல்களிற் கண்ட பாடபேத ங்களும் உரைப்பேதங்களும் மிகப்பலவாம். 'உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு' என இக்காலத்துவழங்குவது 'உண்டிசுருங்கிற்பண் டிக்கழகு' என அவ்வேட்டின்கண் உள்ளது. இவ்வேடு திருநெல் வேலி வித்வான் மகா-௱-௱-ஸ்ரீ பால்வண்ணமுதலியாரவர்கள் நன்மு யற்சியாற் கிடைத்தது.

பாராட்டப்பட்டன என்பது நன்குபுலனாகும். ஈண்டிய பல்புகழ்ப் பாண்டியர் பலரும், திருத்தகு கேள்வி யுருத்திர சன்மரும், வான் றோய் நல்லிசைச் சான்றோர் பிறரும், மேம்படுத்தேத்துந் தேம்படு கல்விக்கடலாய் விளங்கிய இவ்வருந்தமிழ்ச்செல்வியாரின் நல்லிசைப்புலமையை யாமோ எடுத்துரைக்குந் தகுதி யுடையேம். இங்ஙனம் கூறியன கொண்டு கூறுதனவற்றையும் வல்லார்வாய்க் கேட்டுணர்க.

ரா. இராகவையங்கார்.
பத்திராசிரியர்.

உ

நடுவெழுத் தலங்காரக்கவி.

நடுவெழுத்தலங்காரக் கவியாவது சிலசொற்களைச் சுட்டிக்கூறி அச்சொற்களினுள்ள நடுவெழுத்துக்களையாவது அச்சொற்களின் பரியாயமாயுள்ளவைகளுள்ளே இயைபுடைய சொற்களின் நடுவெழுத்துக்களையாவது ஒருங்குகூட்டிச் சொல்லாக்கிப் பொருள்கொள்ளும்படி அமைக்கப்படுவதாகிய அலங்காரமுடையது. வடமொழியாளருள்ளுஞ் சிலர் இவ்வலங்காரம் பெரிதும் விளங்கும்படி சில சுலோகங்கள் செய்துவைத்தனர். தென்மொழியாளருள்ளுஞ் சிலர் செய்துவைத்தனர். சிவஞானமுனிவருடைய திருமுல்லைவாயிலந்தாதியிலும் ஒரு செய்யுள் நடுவெழுத்தலங்காரமாகப் பாடப்பட்டிருக்கின்றது.

திருமுல்லைவாயிலந்தாதி.

கட்டோம் புதலெனக் காமாதி யாறுங் கரிசறுத்தோம்
உட்டோம் புதவு திறந்தின்ப வீடுபுக் குச்சரித்தோம்
சிட்டோம் புதல்விமண் ணேருந்தி கஞ்சந் தெளிவின்முன்பின்
விட்டோம் புதலுறு நள்ளெழுத் தான்முல்லை மேவப்பெற்றே.

இங்கே 'புதல்விமண் ணேருந்தி கஞ்சந் தெளிவின்முன்பின் விட்டோம் புதலுறு நள்ளெழுத்தால்' என்பது நடுவெழுத் தலங்கா

ரம். மாசிலாமணியால் என்பது இதன்பொருளாகும். புதல்வி என்ப தனூற் குமாரி என்னுஞ் சொல்லையும், மண் என்பதனூற் காசினி என்னுஞ் சொல்லையும், ஒருந்தி என்பதனூற் பாலாறு என்னுஞ் சொல்லையும், கஞ்சம் என்பதனல் தாமரை என்னுஞ் சொல்லையும், தெளிவு என்பதனூலே துணிவு என்னுஞ் சொல்லையும் சுட்டினூர். குமாரி என்பது முதலிய ஐந்து சொற்களிலுமுள்ள நடுவெழுத்துக்களை ஒருங்கு சேர்க்க மாசிலாமணி என்றூகும்.

தனிப்பாடற்றிரட்டிலும் நடுவெழுத்தலங்காரக் கவிகள் இரண்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒன்று காளமேகப்புலவருடையது. மற்றையது இராமசந்திரக்கவிராயருடையது. தனிப்பாடற்றிரட்டிற்கு உரைசெய்தவர் இராமசந்திரக் கவிராயருடைய நடுவெழுத்தலங்காரக் கவிக்கு எழுதிய உரை பொருத்தமின்மையுங் கொண்டிருக்கின்றது.

எண்சீர்விருத்தம்.

அத்திரம்வே லாவலய மிராசி யொன்றிற்
கமைந்தபெயர் மூன்றினிடை யக்க ரத்தான்
மெத்தநடுக் குற்றுனைவந் தடைந்தே னிந்த
விதனமகற் றிடுமற்றை யெழுத்தோ ராறிற்
பத்துடையா னைத்தடிந்து பெண்ணுச் செய்து
பரிவினுகர் வோனிருதாள் பணிந்து போற்றுஞ்
சித்தசனே தெளியசிங்கன் றவத்திற் றேன்றுஞ்
சீதாரா மப்ரபல தியாக வானே.

இஃது இராமசந்திரக் கவிராயருடைய நடுவெழுத்தலங்காரக் கவி. உரைகாரர் அத்திரம் என்பதற்குப் பகழி என்னுஞ் சொல்லையும், வேலாவலயம் என்பதற்குக் கடல் என்னுஞ்சொல்லையும், இராசியொன்று என்பதற்குக் கன்னி என்னுஞ் சொல்லையும் எடுத்துக்கொண்டு இம்மூன்று சொற்களிலுமுள்ள நடுவெழுத்துக்களைச் சேர்த்துக்கடன் எனக்கூறி மற்றையெழுத்துக்களாறினையும் முறையே இவ்விரண்டாகப் ‘பழிபத்துடையா னைத்தடிந்து’ எனவும், ‘கல் பெண்ணுச் செய்து’ எனவும், ‘கனி பரிவினுகர்வோன்’ எனவுஞ்சேர்த்துமுடித்தார். ‘பழிபத்துடையான்’ என்பதற்குப் ‘பழிபினுல்ராவணனைக் கொன்று’ என்று பொருளுங்கூறினர். இதுவும்பொருந்துமா? பத்

துடையான் என்பது இராவணன் எனப்பொருள்படுமா? அத்திரம் என்பதற்கு அதன்பரியாய நாமங்களுளொன்ருகிய ககம் என்னும் பதமே எடுக்கத்தக்கது. ' ககம் ' என்பதிலுள்ள நடுவெழுத்தாகிய ககாரம் மற்றையிருசொற்களின் நடுவெழுத்துக்களோடு சேர்த்துக் கடன் எனக்கொள்ளுதற்கும் இயையும். நடுவெழுத்தொழிந்த மற்றையிரண்டெழுத்துக்களாகிய 'கம்' என்பது 'பத்துடையான்' என்பதனேடு சேர்ந்து கம்பத்துடையான் என்ருய் இராவணன் எனப் பொருள்கொள்ளுதற்கும் இயையும். கம்பத்துடையான்=தலைபத்துடையவன். கம்=தலை. இஃதன்றிப் பகழி என்னுஞ் சொல் இங்கே பொருந்தாது.

இஃதன்றிக் காளமேகப் புலவருடைய வெண்பாக்களுள்ளுஞ் சில சீர்களும், அடிகளுந் தவருகப் பிரித்துப் பிரகடனஞ் செய்யப் பட்டிருக்கின்றன.

வெண்பா.

எங்சண் மடத்துக் கெரிகரும்பு கொள்வதுபுங்
கங்கொம்பங் கிங்கொன் பதுபுளியங்—கொம்பங்கிங்
கொன்பது வெட்டி நறுக்கிய தோர்வெள்வே
லங்கொம்பங் கிங்கொன் பது.

இந்த வெண்பா,

எங்கண் மடத்துக் கெரிகரும்பு கொள்வது
புங்கங் கொம்பங்கிங் கொன்பதுபுளி—யங்கொம்பங்
கிங்கொன்பது வெட்டி நறுக்கிய வெள்வே
லங்கொம்பங் கிங்கொன் பது.

என மாறுபடப் பிரித்துப் பிரகடனஞ் செய்யப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் பிரிக்கப்படும்போது இரண்டாமடியிலும் மூன்ருமடியிலும் வெண்டளை வழுவும். காளமேகப்புலவருடைய ' துடித்துத் தடித்துத் துடுப்பெடுத்த கோடல்' என்னும் வெண்பாவிலே 'துடுப்பெடுத்த' என்பதற்குத் ' துடுப்புகளை யேந்தின ' என உரைத்தனர். கலித்தொகையிலே ' துடுப்பெடுத்து' என்பதற்கு நச்சினர்க்கினியர் ' அரும்புகளையுயர்த்தின ' எனக்கூறுவர். இவ்வாறு வருவனவுஞ் சில.

யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் }
குரோதி-ஞு சித்திரைமீ } இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப் பிள்ளை.

சில தமிழ்ச்சொல் வழக்காறு.

சில சொற்கள் இடையேயுள்ள ககரவுயிர் மெய் குறைந்தும் முதனீண்டும் வழங்கும்.

உதாரணம்.

அகல்	,,	,,	ஆல்
பகல்	,,	,,	பால்
அகழ்	,,	,,	ஆழ்
துகள்	,,	,,	தாள்
அகழி	,,	,,	ஆழி
நிகர்	,,	,,	நேர்
மிகல்	,,	,,	மேல்
இகல்	,,	,,	எல்
பகுதி	,,	,,	பாதி

சகரத்தை முதலாகவுடைய சில சொற்கள் சகரங்கெட்டும் வழங்கும்.

உதாரணம்.

சந்தம்	,,	,,	அந்தம்
சவை	,,	,,	அவை
சமர்	,,	,,	அமர்
சமணர்	,,	,,	அமணர்
சமண்	,,	,,	அமண்
சமை	,,	,,	அமை
சமரி	,,	,,	அமரி
சந்தி	,,	,,	அந்தி
சமயம்	,,	,,	அமயம்
சமைதல்	,,	,,	அமைதல்

சிலவுயிர்முதன்மொழிகள் தகரத்தை முதலாகப் பெற்றும் வழங்கும்.

ஆய்	,,	,,	தாய்
ஆழ்	,,	,,	தாழ்
அம்மனை	,,	,,	தம்மனை

அகழி	,,	,,	தகழி
அகைத்தல்	,,	,,	தகைத்தல்
ஒன்பதுபத்து		,,	தொண்ணூறு
ஔவை	,,	,,	தௌவை

சில வுயிர் முதன்மொழிகள் நகரத்தை முதலாகப் பெற்றும் வழங்கும்:—

இரப்பு	,,	,,	நிரப்பு
அணுகு	,,	,,	நணுகு
அண்ணு	,,	,,	நண்ணு
அரற்றல்	,,	,,	நரற்றல்
உமது	,,	,,	நுமது

சிலவுயிர் முதன்மொழிகள் ஞகரத்தை முதலாகப்பெற்றும் வழங்கும்.

எலுவன்	,,	,,	ஞெலுவன்
அமுங்கல்	,,	,,	ஞெமுங்கல்

சில மகர முதன்மொழிகள் நகரமுதன்மொழியாயும் வழங்கும்.

மீகாமன்	,,	,,	நீகாமன்
முனை	,,	,,	நுனை

சில மகரமுதன்மொழிகள் வகரமுதன்மொழியாயும் வழங்கும்.

மீசை	,,	,,	வீசை
மிஞ்சு	,,	,,	விஞ்சு
மிருகம்	,,	,,	விருகம்

சில தகரமுதன்மொழிகள் நகரமுதன்மொழியாயும் வழங்கும்.

துதி	,,	,,	நுதி
தேடல்	,,	,,	நேடல்
தோண்டல்	,,	,,	நோண்டல்

சிலவுயிர் முதன்மொழிகள் ககர முதன்மொழியாயும் வழங்கும்.

அரில்	,,	,,	கரில்
ஆசு	,,	,,	சாசு
அளி	,,	,,	களி
ஆவி	,,	,,	காவி

யகரமுதன்மொழிகள் சில யகரமெய் கெட்டும் வழங்கும்:—

யாறு	,,	,,	ஆறு
யானை	,,	,,	ஆனை
யார்	,,	,,	ஆர்
யாடு	,,	,,	ஆடு
யாண்டு	,,	,,	ஆண்டு
யாளி	,,	,,	ஆளி

சில சொற்களின் முதலெழுத்து மற்றொன்றாக அச்சொற்களுக் கெதிர்ச்சொல் தோன்றும்.

நடத்தல்	,,	,,	கிடத்தல்
தொடு	,,	,,	விடு
பிறத்தல்	,,	,,	இறத்தல்
எழுதல்	,,	,,	விழுதல்
புகழ்	,,	,,	இகழ்
செல்	,,	,,	நில்
அறம்	,,	,,	மறம்
புரத்தல்	,,	,,	இரத்தல்
வாழ்	,,	,,	தாழ், வீழ்
அணவு	,'	,,	தணவு
நிறைதல்	,,	,,	குறைதல்
அல்கல்	,,	.,	மல்கல்
நாடு	,,	,,	காடு
அழுவம்	,,	,,	பழுவம்
தண்டம்	,,	,,	கண்டம்
அல்	,,	,,	எல்
மால்	,,	,,	வால் (வெண்மை)
உகப்பு	,,	,,	அகப்பு (உயர்வு, தழ்வு)
பெருக்கம்	,,	,,	சுருக்கம்
அடி	,,	,,	முடி
தழைதல்	,,	,,	குழைதல்

சில சொற்களிலேயுள்ள டகரம் ழகரமாகவும் திரிந்துவரும்.—

பீடை	,,	,,	பீழை
நாடி	,,	,,	நாழி

*

பேடா	,,	,,	பேழை
கருடன்	,,	,,	கலுழன்

சில சொற்களிலேயுள்ள ழகர வகரம் கெட்டு மொழிமுதனீரு தலும் ழகர வகரம் ழகரமாதலுமுண்டு.

பொழுது	,,	,,	போது
பொழுது	,,	,,	போழ்து
விழுது	,,	,,	வீழ்து
புழுதி	,,	,,	பூழ்தி
கெழு	,,	,,	கேழ்
அமிழ்து	,,	,,	அமுது

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்.

ஆகுபெயரன்மொழித்தொகை ஆராய்ச்சி.

(உஉஉ-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனிக் கைக்கிளைகூறுதல் ஆசிரியர்க்குக் கருத்தன்றெனல் எற் றாற்பெறுதுமெனின் ;—காமத்துப்பாலைக் களவுகற்பென இரண்டா கப் பகுத்தமையானும், இவ்வதிகாரத்திற்குத் ‘ தகையணங் குறுத் தல் ’ என்று பெயரமைத்தமையானும் பெறுதுமென்பது. ‘ தகை யணங்குறுத்தல்’ என்பதற்கு அவள் வனப்புத்தன்மை வருத்தமுறு வித்தலைச்சொல்லுதல் என்று பரிமேலழகியார்தாமும் உரைகூறின ராகலின் கைக்கிளை கூறுதல் அவர்க்குங் கருத்தன்று போலுமென விடுக்க.

இனி, ‘அணங்குகொல்’ ‘ஆய்மயில் கொல்’ என்னுமித்திருவாக் குக் கைக்கிளைப்பாற்பட்ட ஐயமாகா தென்பதற்குப் பின்றெளிதலை உணர்த்துந் திருக்குறட்பா இல்லாமையே உறுகரியாம். அதுவேயுமன் றிக் கிழத்தியின் பேரெழில் தன்னை மிகவருத்திற்றாகக் கிழவன் கூறு

தலை ஈண்டதிகரித்த பொருளாதலும் இதற்குச் சான்றும். இங்ஙனம் இத்திருவாக்குக்கைக்கிளையையமாகாதொழியவே, இதன்கட்டிரும்பப்பொருளையம் பெறப்படுமென்றல் போலியுரையேயாமெனரேற்றம். அல்லதூஉம், இத்திருவாக்கின்கட் பொருளையங் கூறுதல் ஒருவாற்றானும் ஏலாவுரையாதலும் விளக்குவாம். கட்புலனாயதோர் அமைதித்தன்மை கண்ட பின்னல்லது தலைமகற்கு அப்பொருளிடை வேட்கை செல்லாதாம். அவ்வமைதித்தன்மை முற்றுங்கண்டபின் அவ்வமைதிவடிவத்தின் பேரெழிலை மிகவியந்து, அதுபோல்வதோர் பெண்டன்மை முன்கண்டறிந்திலாமையின் 'இம்மகள் மக்களுள்ளாள் கொல்லோ அல்லதோர் அணங்கோ' என்றையுறும். இதுவே கைக்கிளைத்திணையின்கண் ஐயம் நிகழும் வண்ணமாம். இங்ஙனமன்றிப் பெண்டன்மையோடு சிறிதும் இயைதலில்லாக் கலவமயிற்கண் ஐயஞ்சேறலில்லையாம்; கட்புலன்விளங்கவறிந்த பெண்டன்மைகண்டல்லது விழைவு செல்லாமையின் அவ்வாறு விழைவுற்றுநின்ற தலைமகன் தான்கண்ட பெண்மகள் உயர்திணையேயாதல் துணிந்துவைத்தும், அஃறிணைப்பொருளான மயிலோடொப்பித்து ஐயுற்றானென்றல் கைக்கிளைப்பொருண்மைக்குச் சிறிது மேலாது. தொல்லாசிரியர் இயற்றிய கோவைத்துறைகளும் உயர்திணைப்பகுதியிற் றலைமகற்கு ஐயஞ்சென்றதாகவே நெறிப்படக் கூறுதலும், உயர்திணையோடொப்பவைத் தஃறிணைக்கண்ணும் ஐயஞ்சென்றதாகக் கூறாமையும் யாங்கூறுவதே பொருளென்றலை வலியுறுத்தும். திருவாதவூரடிகள்,

> "போதோ விசும்போ புனலோ பணிக ளதுபதியோ
> யாதோ வறிகுவ தேது மரிதி யமன்விடுத்த
> தூதோ வனங்கன் றுணையோ விணையிலி தொல்லைத்தில்லை
> மாதோ மடமயி லோவென நின்றவர் வாழ்பதியே"

என்றருளிச் செய்த திருவாக்கினுள்ளும் "இங்கு நின்ற இப்பெண்மகளார்க்கு இருப்பிடந் தாமரையோ, வானுலகோ, நீரோ, நாகருலகோ, யாதோ சிறிதுந் துணிதல் அரிது" என்றுயர்திணைப்பகுதியிலையஞ் சென்றவாறுகாண்க. திருமகள், அரம்பைமாது, நீரணங்கு, நாகமாது என்றற் றொடக்கத்துயர்திணைப் பகுதிக்கண் ஐயுற்று, யமன்றூதும்,காமன்றுணையும்,மடமயிலும் ஐயுற்ற பொருளைச் சிறப்

பித்தற்கண் உவமையாக எடுத்துத்தலைமகன் கூறுதல் கடைப்பிடிக்க; இதற்குப் பேராசிரியர் கூறிய உரை நுண்மையும் உற்றுணர்தற்பால தாம்.

இனி, ஈண்டுக்கூறியவாறே களவியலுரையிலெடுத்துக் காட்டப்பட்ட

"உரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதன்றென் னூட்டொளிசேர் [ய்
விரையுறைபூம்பொழின் மேலுறைதெய்வங்கொலன்றிவிண்டோ
வரையுறைதெய்வங்கொல் வானுறை தெய்வங்கொனீர் மறைந்த
திரையுறை தெய்வங்கொ லையந் தருமித் திருநுதலே"

என்னுஞ் செய்யுளினும் உயர்திணைப்பகுதிக்கண் ஐயஞ் சொல்லப் பட்டவாறு காண்க. இவ்வாறே தஞ்சை வாணன் கோவையுடையாரும்,

"பாரணங் கோதிருப் பாற்கட லீன்றபங் கேருகத்தின்
ஓரணங் கோவெற் புறையணங் கோவுயர் பாவலர்க்கு
வாரணங் கோடி தருந்தஞ்சை வாணன்றன் மாறைவையை
நீரணங் கோநெஞ்ச மேதனி யாயிங்கு நின்றவரே"

என்று கூறுதல் காண்க.

இனி, இங்ஙனங்களவிக்கோவையிற் கைக்கிளை யையத்தின்கண் வருஞ் செய்யுட்களெல்லாம் வரன்முறைவழாது உயர்திணைப்பகுதியிலையமே கிளந்தெடுத்துக்கூறுதலால் இவற்றின்வேறாக இருதிணை மயக்க வையநிலைபற்றி வந்த "அணங்கு கொலாய்மயில் கொல்லோ" என்னுந் திருவாக்குக் கைக்கிளையையமன்றுதல் ஒருதலையாமென்க. அற்றேலஃதங்ஙனமாக,

"அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு"

என்னுமித்திருவாக்குக்கு மற்றென்னேவுரையெனிற் கூறுதும், "கனவிய குழையணிந்த இம்மடமாதராள் பேரெழில்நலங்களை யான் ஆயுந்தொறும் இவள் இவ்விளங்காவின் உறைவாளோர் சூர்மகளோ; அன்றி மெல்லியதோர் கலவமயிலோ, அன்றி மாதர்தாமோவென் றெண்ணி என்னெஞ்சம் மயங்காநின்றது" என அவடன்கணிந்த வனப்புத் தன்மைமயக்கிற்றாகத் தலைவன் கூறுதலே இவ்வதிகாரம்

நுதலும் பொருளாதல் தெற்றென விளங்கும்; இங்ஙனம் உரையுரைப்புழி அணங்கும், ஆய்மயிலும் ஐயநிலையுவமைக்கண் வந்த உவமங்களாதலின், அவை 'கனங்குழை' என்பதனோடியைதல் தீணவழுவன்றென்பதும் புலப்படும்; இங்ஙனம் இயைத்துப் பொருளுரைக்கும்வழி 'என' வென்னும் ஒருசொல்விரித்து 'மாலும்' என்பதனோடு முடிக்க. இஃது எனவெனெச்சம்; இவ்வெனவெனெச்சம் முன்னுள்ளஉவமங்களைப் பொருளோடியைத்தற் குபகாரமாய்த் தொக்குநின்றது, செய்யுளாகலின்; "ஒய்தலாய்தனிழத்தல்சாஅ, யாவயினுன்குமுள்ளத னுணுக்கம்" என்றாராகலின் ஆய்மயில் 'மெல்லிய மயில்' என்று பொருளுரைக்கப்பட்டது. 'கனங்குழை' பண்புத்தொகை நிலைக்களத்துப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. "கொல்லேயையம்" என்றமையால் 'கொல்' உவமையையத்தின்கண் வந்தது. ஈண்டெடுத்துக்காட்டியஉவமைக்கும் பொருட்கும் பொதுத்தன்மையாவையோவெனின்,—எழுதலாகாவுருவுந் தன்னைவருத்துதலும்பற்றி 'அணங்குகொல்' எனவும், மிளிர்கின்ற சாயலும் பொழில்வயின் நிற்றலும்பற்றி 'ஆய்மயில்கொல்' எனவும் கூறினாகலின் அவையே பொதுத்தன்மையாதல் தெளிக. இப்பொதுத்தன்மைகள் சண்முகம் பிள்ளையுரைக்குமாறு ஆகுபெயரானதால், கணேசையருரைக்குமாறு அவாய்நிலையானதால் வந்தனவல்ல. மற்று இவை உவமத்தின்கண் வந்தபொதுத்தன்மைத்தொகையாதல் அணியிலக்கணத்துட் காண்க. விளக்கவேண்டுழி இவை விரியும். ஐயநிலையுவமையணிபற்றி வருமிடத்தெல்லாம் உயர்திணையும் அஃறிணையும் விராய் ஒருங்குமுடிதல் முன்னெடுத்துக் காட்டிய

> "யமன் விடுத்த,
> தூதோ வனங்கன் றுணையோ வினையிலி தொல்லைத்தில்லை
> மாதோ மடமயி லோவென நின்றவர்"

என்னுந் திருவாக்கினுள்ளுங் கண்டுகொள்க. இதுபோலவே வந்த 'அணங்குகொல்' என்னுந் திருவாக்கும் ஐயநிலையுவமையே யல்லது பிறிதாதல் ஒருவாற்றானும் பெறப்படுமாறில்லை யென்று நிறுவப்பட்டது. இதுகிடக்க.

இனி இத்திருவாக்கின் உண்மைக் கருத்துணராத பரிமேலழகியார் 'கனங்குழை' என்பதனை ஆகுபெயரெனக்கொண்டு அதுவே நிலைக்களனா யுரையெழுதினாராகலின், அவ்வுரைவழுப்பெற்றி இனிதுணர்ந்த ஆசிரியர்-சிவஞானயோகிகள் அஃதாகுபெயரன்றென்று மறுத்தருளினர். 'கனங்குழை' என்பதனைக்காழ்ப்பேறியகற்படையாய் அழுத்தி அதன்மேற் பரிமேலழகியார் தம் உரைப்பொருட்கட்டு உயர்த்தெடுத்த குறிப்பின் நுண்மைகண்டு சிவஞானயோகிகள் அக்கற்படையினைப் புரைப்படுப்பவே அவருரைக்கட்டு நுறுங்கிவிழுந்ததுகாண்க. இவ்வாறே பரிமேலழகியார் தேய்வப்புலமைத்திருவள்ளுவனார் கருத்துணராது ஒரோவிடத்து வழுவிக் கூறுவர்; அவ்வாறுதல் நாம் நடாத்தும் ஞானசாகரப் பத்திரிகையின், முதற்பதுமத்துப் பன்னிரண்டாவது இதழினுங் காட்டினும். அதுபற்றி அவர் இகழப்படுவாரல்லர். உலகின்கட் பரந்துபட்டநுண்பொருள் முழுமணிகளெல்லாம் பொறுக்கியெடுத்துக் கழுவித் தந்தெய்வப் புலமையான் அடுக்கடுக்காய் நிரல்படப்பொதிந்து திருவள்ளுவனார் உலகிற்கு வழங்கியருளிய திருக்குறளென்னுந் தெய்வத்தங்கப்பேழகத்தினைத்திறந் தம்முழுமணிகளோவ்வொன்றன் வரம்பறியா விலையை மதிப்பிட்டு அளந்தறிதல் எத்தகைய புலத்துறை முற்றினார்க்கும் ஏலாமையாற் பரிமேலழகியார் ஒரோவிடத்துப் பிறழ்ச்சியுரை கூறுதல்பற்றி இகழப்படுவாரல்லராதல் சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தவாறேயாம். ஆசிரியர் சிவஞானயோகிகள் முன்னையுரையாசிரியரிற் றெய்வப்புலமை நக்கீரனாரை யொழித்து ஒழிந்தாருட்டமக்கு மிக்காரும் நிகர்வாரும் இல்லாத் தெய்வப்பெற்றிமையுடைய அருளாளராகலின், அவர் முன்னையுரையாசிரியர் மயக்கவுணர்ச்சியால் ஒரோவிடத்து வழுப்படவுரைத்த நலமிலுரைகண்டு உலகமயங்காவண்ணம் தாமியற்றிய வுரைநூல்களுள் ஆண்டாண்டு விரிவகையானுஞ் சுருக்கவகையானுங் குறிப்பானும் அவற்றைக் களைந்து மெய்ப்பொருள் நிலையிடுவர். ஆகவே, சிவஞானயோகிகள் முன்னையுரையாசிரியரை மறுக்குமிடனெல்லாம் வன்மையுடைய பிரமாணவாக்கியங்களாதலால், அவை தம்மை நுணுகியாராய்ந்து முடிபுரை கிளத்தல் இன்றியமையாததாகுமென்னுங் கடப்பாடு மேற்கொண்டு மற்றிஃதெழுதவொருப்பட்டாம் என்க.

இத்துணையுங் கூறிய பொருட்டொகுதியினாற் றேறப்படும் முடிபுரைகள் யாவையோவெனின்;—ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் வேறேயாமென்னும் ஆசிரியர் சிவஞானயோகிகள், நச்சினார்க்கினியர், சண்முகம்பிள்ளை முதலாயினார் பக்கமே வலியுடைத்தென்பதூஉம், அவையொன்றேயாமென்னும் சேனாவரையர், கணேசையர் முதலாயினார் பக்கம் தொல்காப்பியனார் சூத்திரப்பொருளோடு முரணி வழுப்படுதலின் அது கொள்ளற்பாலதன்றென்பதூஉம், 'அணங்குகொல்' என்னுந் திருவாக்குண்மை கடைப்பிடியாது அதன்கட் போந்த 'கனங்குழை' என்னும் அன்மொழித்தொகையை ஆகுபெயராமென மறித்துங் கொண்டுரைத்த பரிமேலழகியாருரை ஆண்டைக்கொருசிறிதும் பொருந்தாதென்பதூஉம், அவ்வுரை போலியுரையாதறரிக்க ஆசிரியர் சிவஞானயோகிகள் 'கனங்குழை' அன்மொழித்தொகையேயாமென நிறுவி அவரை மறுத்தது வாய்மையேயாமென்பதூஉம், இங்ஙனமறுத்த ஆசிரியர்கருத்துணராது சண்முகம்பிள்ளையவர்கள் அவர்க்குங் குற்றங்கூறப் புகுந்தது ஒருசிறிதும் பொருந்தாதென்பதூஉமாமென்க.

நாகபட்டினம்-வேதாசலம்பிள்ளை,
'ஞானசாகர' ப்பத்திரிகாசிரியர்,
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்.

உ

குமரன்றுணை.

நுண்பொருட்கோவை.

(கஙஙு-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி ஒத்ததறிவான் எனவும், ஒக்குமெனவும், ஒகரமுதனிலையாகி வினைவிகுதியொடு புணரினும் பெயர் விகுதியொடும் வருமொழியொடும் புணராமையின், அதுபோலவே எகாரமும் பெயர் விகுதியொடு புணருமன்றி வினைவிகுதியொடும் வருமொழியொடும் புணரா

தெனக் கொள்ளுதுமெனின்; அது பொருந்தாது. என்னை; மலைமுதலிய பெயர்ச்சொற்கள் முதனிலையாகின் அன்முதலிய பெயர்விகுதியொடு புணர்ந்து பிறிதொரு பொருளுணர்த்தி, மலையனென்றாற்போலப் பிறிதொரு பெயர்ச் சொல்லாகும். அது வருமொழியொடும் புணர்ந்து எட்டுவேற்றுமையுள் ஒன்றனையேற்று மலைபெரிது என்றாற்போலத் தன்பொருளையுமுணர்த்தும். சில இடைச்சொற்கள் பெயர் விகுதியொடு புணர்ந்து அவன் அன்னன் அனையன் என்றாற்போல பெயராகின் அதுவே வருமொழியொடுபுணர்ந்து அக்கொற்றன் அன்னகொற்றன் அனையகொற்றன் என்றாற்போலப்பெயர்க்கு விசேடணமாகியும்வரும். சில இடைச்சொற்கள் வினைவிகுதியொடு புணர்ந்து போன்றான் நிகர்த்தான் என்றாற்போல மூவிடத்து வினையாகிவரின், அவையே வருமொழியொடு புணர்ந்து, போல்கொற்றா நிகர்கொற்றா என ஏவல்வினையாகியும் வரும். சில இடைச்சொற்கள் பெயர் விகுதியொடும் வினைவிகுதியொடும், புணர்ந்து பெயராதலும் வினையாதலுமின்றிப் பெயரையும் வினையையும் சார்ந்து நீயே கொண்டாய் நிலனே நீரே என்றாற்போலவரும். உரிச்சொல் பெயராகியும் வினையாகியும் பெயர்க்கும் வினைக்கும் விசேடணமாகியும் விகுதியேற்றும் ஏலாதும், கவின், கவினிய, கடிக்கமலம், தாய்பெரிது, என்றாற்போல வரும். வினைச் சொல் பெயர் விகுதியொடு புணருமிடத்துத் திரிந்து நடையனென்றாற்போல இருதிணை ஐம்பாலுள் ஒன்றனையுணர்த்திப் பிறிதொரு பெயர்ச் சொல்லாகி வரும். அது வேற்றுமை யேற்று வருமொழியொடு புணர்ந்து நடை நன்று என்றாற்போன்று வரும். வினைவிகுதியொடு புணரிற் காலங்கொண்டு நடந்தானென்றாற் போலப் பிறிதொருபொருளின் புடை பெயர்ச்சியையும் அப்பொருளையுமுணர்த்தும். அதுவே வருமொழியொடும் புணர்ந்து நடகொற்றா என்றாற்போல ஏவலாகியும் வரும்.

இவ்வாற்றான் ஒகரமே முதனிலையாகி வினை விகுதி பெறுமாயின் அதுவே ஏவல் வினையாய் வருமொழியொடும் புணரல்வேண்டும். அவ்வாறின்மையானும், தந்தான் தருவான் செத்தான் வெந்தான் முதலியவற்றுள் முதற்கணிற்றல்பற்றித் தரு, செ, வெ, முதலியன முதனிலையெனக்கொள்ளப்படாமையானும், ஏவற்பொருண்

மையுடைய தா-சா-வே. என்பன முதலானவையே முதனிலையெனக்கொள்ளப்படலானும் அதுபோலவே ஒத்தான் முதலியவற்றுள், ஒகரம் பொருள்பயவாமல் ஒவ் என்பதே ஏவலாகநிற்றலின் அதுவேமுதனிலையெனப்படுமன்றி ஒகரம் முதனிலையாதல் இன்மையானென்பது.

இனி ஏவன் முதலியவற்றுள் ஏகாரம் பிறபெயரொடு புணராமையின் அது முதனிலையாகாமை அமையும்: எவன் எனவும் எக்கொற்றன் எனவும் எகரம் விகுதியுடனும் பிறபெயரொடும் புணர்ந்து முடிதலின் அதனை முதனிலையாகாதெனக் கூறல்மையாது. பின் ஆசிரியர் எகரத்தை நிலைமொழியாக நிறுத்தி விதிகூறாமை அது சுட்டெழுத்தோடொத்த குற்றெழுத்தாகலின் சுட்டெழுத்துக்குக் கூறியவிதியே தன்னினமுடித்த லென்னு முத்தியால் அதற்குமெய்துமெனக்கருதியெனின்; அதுபொருந்தாது. என்னை, அது கருத்தாயின் அகரச்சுட்டுக்குக் கூறியவிதியே இகர உகரங்களுக்கும் ஒத்தலின் அவற்றையும் கூறாது விடுத்தல்வேண்டும். அவ்வாறின்றி வேறு வேறு கூறலானும், எகர ஒகரம் முன்னிலை மொழியாகிய வினையின் கண்ணும், தேற்றமுஞ்சிறப்புமாகிய இடைச்சொற்கண்ணும், ஏகாரம் அளபெடுக்குமிடத்துச் செயற்கையின் ஈறாதலன்றி, ஏனையவிடத்து இயற்கையின் ஈறாகாவென விலக்கினமையானுமென்பது.

இனி "எயா, முதலுமாவோவீற்று, மேயிருவழியும் வினாவாகும் மே" "எகரவினா முச்சுட்டின் முன்னர்" "இவையடைசுட்டுவினாப்பிறமற்றோ, டுற்றனவ்வீறு" என நன்னூலார் கூறினமையின் எ. ஏ. யா. என்பனவும் சுட்டும் பிற மற்று என்பனவும் முதனிலையாதல் பெறப்படலின் அகர முதலியவற்றைச் சுட்டெழுத்தென்றும் முதனிலையென்றுங்கொண்டு எகர முதலியவற்றை வினாவெழுத்தாகா வென்றும்முதனிலையாகாவென்றுங்கூறலென்னையோவெனின்;--நன்னூலார் ஆசிரியர் 'ஆ ஏ ஓ அம்மூன்றும்வினா,' எனவரையறை கூறியிருப்பவும் அதனை நோக்காது எழுத்தாதலேயன்றி வினாவாகாத எகரத்தையும் யாவென்பதையும் வினாவெழுத்தென்றும், ஈற்றினன்றி முதற்கண் வாராத ஏகாரத்தை முதற்கண்ணும் வருமென்றும், யாவன் யார் யாங்கு முதலிய வினாப்பெயர், வினாவினை, வினாவிடைச்சொல் முதலி

யவற்றுள், முதற்கணின்ற, எ, ஏ, யா, என்னுமெழுத்தைக் கண்டு வேற்றுமையுணராதுமயங்கிக்கூறினர். அஃதாசிரியர் கருத்தாகாமை யின் அவை வினவெழுத்தும் முதனிலையுமாகாமல் எழுத்தாகவே நிற்குமென்பது.

இனிச்சுட்டெழுத்து முதனிலையாகிய அங்கு அன்று அவண் அங்ஙனம் அங்கனம் அவ்வயின் ஆண்டு ஆங்கு முதலிய இடைச் சொற்களும் அவன் முதலிய பெயர்களும் அச்சுட்டெழுத்தே முதனி லையாகிப் புறத்துநின்ற அக்கொற்றன் முதலியபெயர்களு முளவாயி னாற்போலவே எங்குஎன்று எவண் எங்ஙனம் எங்கனம்எவ்வயின்என் னுமிடைச்சொற்களும் எவன்எவள்முதலியபெயர்களும்எவனென்னும் ஐம்பாற் பொதுப்பெயரும் எவன் என்னும் வினைக்குறிப்பும் எக்கொ ற்றன் முதலிய பெயர்களும் ஏவன் முதலிய பெயர்களும் யாங்கு யா ண்டு யாங்ஙனம்,யாங்கனம்என்னுமிடைச்சொற்களும்யாவன்முதலிய பெயர்களும் யார்என்னும் வினைக்குறிப்பும் உளவாகவும்அகர இகர உக ரங்களைச்சுட்டெழுத்தென்றும் முதனிலையென்றும்கொண்டுஎ-ஏ-யா- என்பவற்றை மாத்திரம் வினவெழுத்தாகாவென்றும் முதனிலையாகா வென்றும் கூறினமை யென்னையோவெனின்;—சச்சினன், இல்லத் தன் பொன்னன் சரியன் முதலிய சொற்கள் விகுதிப் பொருளாகிய உயர்திணைபாண்பாலுக்குக் கச்சுமுதலியன உடைமையும் நிலமும் ஒப்பும் பண்பு முதலியவற்றுள் ஒன்றாகி அப்பொருளுக்கு வேறாகி நிற்றலின், அக்கச்சு முதலியன அப்பொருளுக்கு முதனிலையென லமையுமாறுபோலச் சுட்டெழுத்துக்களும் விகுதிப் பொருளுக்கு வேறாகிய சேய்மையையேனும் அண்மையையேனும் அவற்றுக்குப் பொதுமையையேனும் உணர்த்தலின் அவை முதனிலையாதலும், எழுத்தாகநில்லாது பொருளுணர்த்தலிற் சுட்டெனப்பெயர் பெறலு மமையும்; தன்மை முன்னிலைபடர்க்கையும், ஆண்பால் முதலியவும், விளியும் பொருளின்வேறாகிய பிறிதொன்று எனப்படாது அப்பொரு ளின் வகையுளொன்றெனவே கொள்ளப்படுமாதலின், அத்தன்மை முதலியவற்றையுணர்த்தற்கு யாதானுமொரு முதனிலையை அவை பெறுவாறு போலவே வினப்பெயரும் அறிபொருள் அறியாப் பொருள் ஐயப்பொருள் வினப்பொருள் எனப் பொருள் வகையுள்

ஒன்றுவதன்றி அதனின் வேறாகிய பிறிதொன்றுதலமையாமையின் வினாப்பொருளை யுணர்த்தற்குரிய எழுத்துக்கள் எ-ஏ-யா எனலும், அவை முதனிலையாமெனலும், அவற்றுள், எகரம் நிலைமொழியாகி எக்கொற்றன் முதலியவாகவந்தனவெனலும் பொருந்தாதென்பது.

இனி எ ஏ யா வினாவெழுத்தாகாவெனின் எவன் ஏவன் யாவன் முதலியன வினாப்பொருளுணர்த்துமா றென்னையோவெனின்; யான் யாம் என்பனவும் நீ நீயிர் என்பனவும் இது முதனிலை இஃது இறுதிநிலை எனப்பகுக்கப்படாது பிண்டமாகவேநின்று தன்மையொருமை தன்மைப்பன்மையும், முன்னிலை யொருமை முன்னிலைப்பன்மையு முணர்த்துமாறுபோலவும், நிலம் நீரென்பன காட்சிப்பொருளென வும், அன்பு அருண் முதலியன கருத்துப் பொருளெனவும் அறியப் படுமாறுபோலவும் யாவன் முதலியவும் பகுக்கப்படாது பிண்ட மாகவே நின்று வினாப் பொருளென அறியப்படுமென்பது.

இனி. யான் யாம் என்பன அன்முதலிய விகுதி பெறாமையிற் பிண்டமெனலமையும்: யாவன் யாவள் முதலியவற்றுள் அன் அள் முதலிய ஐம்பால் விகுதிகள் காணப்படலாலும், நன்னூலார், "இவை யடை சுட்டுவினாப்பிறமற் றோடுற்றனவ் வீறு, என அவற்றைப் பகுபதமெனவே கொண்டமையானும், எ, யா என்பன, விகுதிப் பொருளின் வேறாகிய பிறிதொரு பொருளுணர்த்தாவிடினும் எவன் முதலியவற்றை முதனிலையு மிறுதிநிலையுமாகப் பகுத்தலமையுமெ னின்; அலவன், கலுழன், என்பனவும், மக்கள், திங்கள், மஞ்சள், என்பனவும், எக்கர் பொங்கர் என்பனவும், பருந்து, விருந்து, என் பனவும், மரப்பெயராகிய, விள, கள, என்பனவும், ஈற்றின்கண், அன். அள். அர். து. அ. என்பவற்றையுடையவாயினும், அல கலுழ் மக்கு, திங்கு முதலியவாகப்பிரிப்பின் அவை பொருள் பெறாமை யாற் பிரிக்கப்படாமைபோல யாவன் முதலியவும் பகுக்கப்படா.

அவை பகுக்கப்படுமாயின் யான்யாம் என்பனவும் ஒருமை பன் மையுணர்த்தும் னகரமும் மகரமுமிருத்தல் பற்றி யா, முதனிலை யெனவும், னகர, மகரங்கள் இறுதிநிலையெனவும் பகுக்கப்படுமெனப் பட்டு வழுப்படுமென்பது.

இனி அலவன் முதலியவற்றுள் அன்முதலியன விகுதிப்பொருளாகிய ஆண்பால் முதலியவற்றையுணர்த்தாமையின் அவற்றைப் பகுத்தலமையாது. யாவன்முதலியவற்றுள் அன்முதலியன ஆண்பால்முதலிய விகுதிப்பொருளை யுணர்த்தலின் அவற்றைப்பகுத்தலமையுமெனின்; அப்பன், சாத்தன் என்பனவும், அக்காள் என்பதும், உப்பா என்பதும், காழத்து என்பதும், பிற என்பதும், அன் முதலியவற்றை ஈற்றிற்பெற்று ஆண்பால்முதலியவற்றையுணர்த்தினும், அப்பு, சாத்து, அக்கு, உம்பு, கழுமுதலியவாகப் பகுப்பின் அவை பொருள்பெறாமையிற் பகுக்கப்படாமைபோலவும், நீயிர் என்பது, முன்னிலைப்பன்மையுணர்த்தும் இர் என்பது ஈற்றினின்றமை பற்றி, நீ முதனிலை இர் இறுதிநிலை யெனப்பகுத்தலமையாமை போலவும் யாவன்முதலியவும் பகுக்கப்படாவென்பது.

இனி யாவன்யாவள் முதலியவற்றுள் யா எனப் பிரிப்பினும் அது சுட்டுப் பெயர்களுட் சுட்டெழுத்துப்போலப் பொருள்பயக்குஞ் சொல்லாகநிற்றலின் அவற்றைப் பிண்டமெனக் கூறலமையாதெனின்; அவன் முதலியவற்றுள் அகரமுதலியவற்றைப்பிரிப்பின் அவை சேய்மை அண்மை முதலியவற்றைச் சுட்டி இடைச்சொல்லாகவே நிற்றலின் அவை முதனிலையாதலமையும். யாவன் முதலியவற்றுள், யா என்பது பிரிக்கப்படுமாயின் அஃதிடைச்சொல்லாகாது வினுப்பெயராகி அஃறிணைப்பலவின்பாற்படர்க்கையே குறித்தலானும், உயர்திணைப்பெயர்களும் நான் நீ முதலிய தன்மை முன்னிலைப் பெயர்களும் விளிப்பெயர்களும் வினுப்பெயர்களும் முதனிலையாகிப் பிறிதோர் விகுதியேற்குமியல்புடையனவல்லவாதலானும் யாவன் முதலியன பிண்டமேயென்பது.

இனி, யா என்னும் வினுப்பெயர் முதலியன முதனிலைத்தன்மை பெறுமை என்னையோவெனின்; மலையன் முதலியவற்றுள் ஏனைய பகுதிகள் தம்பொருள் சிதையாமல் மலையையுடையான் மலைக்கண் இருப்போனெனப்பொருள் படுமாற்போல யாவற்றையுடையான் யாவற்றின்கணிருப்போன் எனப்பொருள்பயத்தல்வேண்டும்: அவ்வாறின்றி யாவன் என்வினுவப்படும் பொருண் மாத்திரையே யுணர்த்தலின் முதனிலைத்தன்மையின்மை யுணரப்படுமென்பது.

(இன்னும் வரும்)

அ. சண்முகம் பிள்ளை.

ஓம்

திருச்சிற்றம்பலம்.

கடவுள்.

தென்மொழியிற் கடவுள் என்னும் தொழிற்பெயர்ப் பகுபதத்தின் முதற்கண் நின்ற கட என்னும் பகுதிக்கும், வடமொழியில் **பிரமம்** என்னும் பதத்தின் முதற்கண் நின்ற பிருக (ப்ருஹ) என்னும் பகுதிக்கும் ஓங்கியிருத்தல் எனப் பொருளுண்மையில் அவ்விரு மொழிகளும் ஒரு பொருண் மேலன.

வியாசரருளிய வேதாந்தசூத்திரத்துக்கு மூலமாய் நின்ற ஈச, கேன, கட, பிரசின, முண்டக, மாண்டூக்கிய, ஐதரேய, தைத்திரீய, சாந்தோக்கிய, பிருகதாரணிய, கௌஷீதகிப் பிராம்மண, மகாநாராயண, சுவேதாசுவதர, ஜாபால, கைவல்லிய, மைத்திராயண, சிவசங்கற்ப, அதர்வசிரசு, அதர்வசிகை என்னும் முக்கிய உபநிடதங்களிலே பிரதிபாதிக்கப்பட்ட பிரமம் ஏகவாதிகள் கொண்ட குணரகிதப் பிரமமாகாததாய், (சீவான்ம பரமான்மாக்கள் என்னும் இரண்டையும் பேதத முத்திதசைகளில் நித்தியமென வாதிக்கும்) உபயவாதிகளாகிய வைதிக சித்தாந்திகள் கொண்ட அருட்சிற்சத்திக் குணங்களையுடைய சகுணப்பிரமமென்பாராய்த் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் "அகரமுதல" என்னும் முதற்றிருக்குறளிலே அப்பிரமத்தைப் "பகவன்" என்னும் பதத்தினல் விதந்து கூறினர். கூறவே, பகவன் என்றது ஞானம், திரு, வைராக்கியம், புகழ், வீரியம், ஐசுவரியம் என்னும் அறு குணங்களும் பிரமத்துக்குள்வாம் என்பதை,

(௧) ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸ꞉ ஶ்ரிய꞉ |
ஜ்ஞாநவைராக்யயோஶ்சைவ ஷண்ணாம் பக இதீரணா ||

என்னும் ஸ்மிருதிச் சுலோக வாயிலாகத் தெரிக்கின்றது.

சுதர்சனசாரியர் எனப்படும் அரத்தசாரியர் ஞானமுதலிய அறு குணங்களுள்,

I ஞானம் என்னும் குணம் பிரமத்துக்கு உளதாதற்கு முதலாவது முண்டகத்து முதலாம் கண்டத்து ஒன்பதாம் மந்திரத்தினும், நான்காவது பிரசினத்துப் பத்தாம் மந்திரத்தினும், மாண்டூக்கியோபநிடதத்து ஆறும் மந்திரத்தினும் காணப்படும் முற்றறிவை உணர்த்தும் சர்வஞ்ஞர் (ஸர்வஜ்ஞ:) என்னும் பதச்சுருதியே பிரமாணம் என்றும்,

II ஸ்ரீ எனப்படும் திரு என்னும் குணம் பிரமத்துக்கு உளதாதற்கு இருக்குவேதத்து ஐந்தாம் மண்டலத்து முதலாம் அங்கத்து மூன்றாம் சூக்தத்து மூன்றும் மந்திரமாகக் காணப்படும்,

(உ) தவ ஶ்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ர யத்தே ஜநிம சாரு சித்ரம் |

"உருத்திரரே! விசித்திரமாகிய உமது இலிங்கத்தைத் தேவர்கள் (அருட்) டிருவைப் பெறும் பொருட்டு அபிஷேகாதிகளினால் அர்ச்சித்தனர்" என்னும் சுருதியே பிரமாணம் என்றும்,

III அப்பிரமத்துக்கு வைராக்கியம் என்னும் குணம் உளதாதற்கு ஸ்காந்தபுராணாதி உபப்பிருங்கணங்களால் வலியுறுத்தப்படும் (ஸ்மரஹர) காமரிபு பதச்சுருதியே பிரமாணம் என்றும்,

IV அப்பிரமத்துக்குப் புகழ் என்னும் குணம் உளதாதற்கு,

(௩) ஸமஸ்த கல்யாண குணைக வாஸ: |
ஶிவ இத்யுச்யதே ஸத்பி: ஶிவதத்வார்த்த வேதிபி: ||

"அனந்த கல்யாண குணகணராதலின் சிவதத்துவஞானிகளாற் சிவன் என்று கூறப்படுகின்றார்" என்னும் உபப்பிருங்கணத்தினால் சிவ பதச்சுருதியே பிரமாணம் என்றும்,

V அப்பிரமத்துக்கு வீரியம் என்னும் குணம் உளதாதற்கு,

(௪) ந தஸ்ய ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே |

உக்கிரமாகிய பலத்தினால் இவர்க்கு "ஒப்பானவரும் மிக்கானவரும் இல்லை" எனவும்,

(ரு) பலேநைவ ப்ருதிவீ திஷ்டதி |

"அவர் பலத்தினாலன்றோ பூமி நிற்கின்றது" எனவும் போந்த சுருதிகளே பிரமாணம் எனவும்,

VI அப்பிரமத்துக்கும் தர்மைசுவரியம் என்னும் குணம் உளதாதற்கு மகா நாராயண முதலிய உப நிடதங்களிற் கூறப்படும் ஈசுரபதச்சுருதியே பிரமாணம் என்றும் ஓர்ந்து,

(சு) ஐஶ்வர்யமீஶ்வரபதஶ்ருதிருக்ரஶப்தோ வீர்யம்
யஶஶ்ஶிவபதஶ்ருதிரப்யதத்தே | ஸர்வஜ்ஞஶப்தஸ்ஸ்மரஹேத்ருதிஶ்ச
ஶ்ரீம் ச ஸர்வஜ்ஞாநம விரஹோ ஹவத: பராரே ||

"திரிபுரஹரரே, உமது ஐசுவரியத்தை ஈசுவரபதச் சுருதியும், ஒருவரால் செயிக்கப்படாத வீரியத்தை உக்கிரபல சுருதியும், புகழைச் சிவபதச் சுருதியும், ஞானத்தைச் சர்வஞ்ஞ சுருதியும், வைராக்கியத்தைக் காமரிபு சப்தமும், திருவை இருக்கு வேத சுருதியும் கூறுவனவாயின" என்றருளிச் செய்தார்.

மேலே உரைத்த பகவனின் அறுகுணங்களையும் கடவுள்வாழ்த்துத் திருக்குறள்களிலே அமைத்தவாறு காட்டுதும்;—

1 பிருதிவிமுதற் சிவதத்துவாந்தம் வரையுமுள்ள முப்பத்தாறு தத்துவ புவனங்களின் பொருள்களையும் எவ்வெக்காலத்தும் இருந்த இருந்தவாறே அறியும் பரப்பிரம பகவானின் முற்றறிவு எனப்படும் சர்வஞ்ஞதையைத் திருவள்ளுவ நாயனராகிய முதற் பாவலர் கடவுள் வாழ்த்தின் இரண்டாவது திருக்குறளில் "வாலறிவன்" என்றார்.

II விசித்திர ரூபமாகிய மகாலிங்கத்தைத் தேவர்கள் புறத்தே பூசித்து தத்தம் மேலாகிய திவ்யபோக பதங்களைப் பெற்றவாறு போல, யாவராயினும் அன்பினேடு பிண்டமாகிய சரீரத்தினகத்தே தகரபுண்டரீகத்திலே பரப்பிரமபகவானை ஆன்மலிங்கத்துக்கு நாயகராகக் கொண்டு அந்தரியாக பூசைசெய்து வழிபடின் பரமானந்த கைவல்லியலட்சுமி எனப்படும் தமது திருவை அவ்வன்பர்களுக்குத்

தப்பாது பாலிப்பார் என்பதை உணர்த்துமாறே நந்தெய்வப் புலவனார் அவர் ஸ்ரீபாதத்தைத் திருவடி என்பாராய் மூன்றாவது திருக்குறளில் "மாணடி" என்று கூறினர்.

III பரப்பிரமபகவானாகிய தாம் எப்பொருளினும் வியாபகமுற்று நின்றாரேனும் அவர் அப்பொருள்களாற் சிறிதும் தொடக்குண்ணார் என்பதையும், ஒவ்வொரு பொறிகளால் அவ்வவ் விஷயங்களைத்தனித்தனியே நுகரும் ஐம்புலன்களும் "கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியுமைம்புலனு மொண்டொடிகண்ணேயுள" என்றவாறு ஐம்புலன்களாலும் ஓரேகாலத்தில் நுகரப்படுகின்ற சிற்றின்பப் பற்றைமுற்றும் அறுத்தவர் என்பதையும் முறையானே உணர்த்துதற்கு நான்காவது குறளில் "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்றும், ஆறும் திருக்குறளில் "பொறிவாயிலைந்தவித்தான்" என்றும் நம்பெருநாவலனார் அருளினர்.

IV சமஸ்தகல்யாண குணங்களினாலோங்கிப் பெரிய மெய்ப்புகழ் படைத்தமையினாலன்றோ அப்பரப்பிரம பகவானுக்குச் "சிவ" என்னும் திருநாமம் போந்தது எனவும், அச்சிவசப்தத்தை எக்காலத்தும் எவ்விடத்தும் உச்சாரணஞ் செய்தல்வேண்டும் என்றும், அங்ஙனம் செய்தலால் உலகிற் பயின்ற பாவமனைத்தையும் தகிப்பது சிவ என்னும் திருநாமம் என்பாராய், அச்சிவசப்தத்தைப் "பொருள்சேர் புகழ்" என்றமையினாற் சூசிப்பித்தும், அதனை உச்சாரணஞ் செய்வாரைப் "புரிந்தார்" என்றும் ஐந்தாவது திருக்குறளில் உபதேசித்தார்.

V வீரிய பலத்தினால் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலாதவர் அப்பரப்பிரம பகவானார் என்பதை உணர்த்துதற்கு நாயனார் "தனக்குவமையில்லாதான்" என்று ஏழாவது திருக்குறளில் அமைத்தருளினார்.

VI தருமைசுவரிய ஔதாரிய மகரால‌யர் அப்பரப்பிரமபகவானார் என்பதை உணர்த்துதற்குத் திருவள்ளுவ தேவர் "அறவாழியந்தணன்" என்று எட்டாவது திருக்குறளில் வாழ்த்தினார்:

அங்ஙனம் ஸ்மிருதியிற் கண்டவாறு பரப்பிரமபகவானுக்கு அவ்வறு குணங்கள் உளவாமுறையை மேலே உரைத்த குறள்கடோறும் பிரயோகித்தமை யோடமையாது, சாமவேதத்தைச் சார்ந்த சாந்தோக்கியோபநிடதத்து எட்டாவது பிரபாடகத்து ஐந்தாம் மந்திரத்தினும், சர்வஞ்ஞானோத்தரத்தினும் முறையே காணப்படும் அபகதபாப்மா முதலிய எண்குணங்களையேனும், சர்வஞ்ஞதை முதலிய எண்குணங்களையேனும் சூசிப்பிக்குமாறு ஒன்பதாம் குறளில் "எண்குணத்தான்" என்றும், இவ்வியல்பையுடைய பரப்பிரமபகவானாகிய கடவுளை அடைக்கலமெனச் சார்ந்தவரே பிறவிசாகரத்தைக் கடக்க வல்லுநராவர் என்பதை விளக்குவாராய்ப் பத்தாம் திருக்குறளில் திருவள்ளுவதேவர் "பிறவிப் பெருங்கடனீந்துவர்" என்றும் திருவாய்மலர்ந்தருளினார்.

(தொடரும்)

திருப்பரங்குன்றம்,
5—6—04. } ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர்.

உ

சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இருபெருங் காப்பியங்களின் பிறப்பிடம் யாது?

(உகள-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

15 சிலப்பதிகாரமானது கிறிஸ்துபிறந்தபின் முதல் நூற்றாண்டிலாக்கப்பட்டதாகக் காண்கின்றது. அதில் எட்டாவது வேனிற்காதைத் தொடக்கத்தில் 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமுந், தமிழ்வரம் பறுத்த தண்புன னாட்டு' என்று மேற்கூறப்பட்ட எல்லைகளை உறுதிப்படுத்திச்சொல்லப்பட்டிருக்கின்றது. பின்னர்வந்த சிகண்டியாரும் தொக்குநின்றவைகளை வெளிப்படுத்தி 'வேங்கடங்குமரிதீம்புனற்பௌவமென், றிந்நான்கெல்லைதமிழது வழக்கே' யெனக்கூறினார். இவைகளில் யாதிலாயினும் தமிழகத்

*

தில் நின்றும், மலேயாளநாட்டைப் பிரித்துக்காட்டவில்லை. மேலு மிற்றைக்கு ஆயிரம்வருடங்கட்குமுன், கம்பநாட்டாழ்வார் தமது இராமாயணத்தில் நாற்பயனியம்பியவிடத்து 'வடகலை, தென்கலை, வடுகு, கன்னடம்-இடமுளபாடையாதொன்றினுயினும்—திடமுள ரகுகுலத் திராமன்தன்கதை—அடைவுடன் கேட்பவ ரமர ராவரே' என்று கூறியவிடத்து மலேயாளமொழியிருந்ததாகக் கூறவில்லை. அதன்பின்ன ரிற்றைக்கு 700-800 ஆண்டுகட்குமுன் பவணந்திமுனி வர் நன்னூலுரைத்த காலத்திலுந் தமிழகத்திற்கெல்லை ஏறக்குறைய மேலியம்பியவாறே, 'குணகடல், குமரி, குடகம், வேங்கடம் எனுநான் கெல்லேயினிருந் தமிழ்க்கடல்' என வாய்மலர்ந்தருளினர். இதனுல் கொடுந்தமிழ்நாடாயிருந்த குடகம், கன்னடநாடாய்விட்டதென்றல் லாமல் மலேயாளநாடொன்றக்காலத்திலிருந்ததாகக்காணவில்லை. மே லும் மலேயாளமொழியிற்றேர்ந்த புலவர்கள் தங்கள் பாடைக்கு 550 வருடங்கட்குமேற் பிராயமில்லையென்பதுஞ் சம்மதிக்கின்றனர். அ வர்களுடைய சிறப்புப்பெற்ற பாவாணராகிய எழுத்தச்சன்கால ம்-300. முந்நூறு வருடங்கட்குட்பட்டதாக அவர் சமைத்த இரா மாயணத்தாற்காண்க. மேற்கூறிய காலவரம்பிற்குமுன் மலேயாளம் ஓர்தனிமொழியா யிருந்ததாயெண்ணப்படாது: ஏனென்றுல், அதிலுள்ள பண்டைநூல்களாகிய கிருஷ்ணகாதை முதலானவை மிக்கவாறுந் தமிழேயாம். சொற்கள் தமிழாயிருப்பதுந்தவிர, அ வைகளினீறும், வாக்கியங்களின் முடிபுகளும் பெரும்பான்மையுந் தமிழைப்போற்றி திணை-பால்-இடம் முதலியவற்றைத் தழுவிவந் தன. ஆகையாற்றமிழின் வழிமொழியாகிய மலேயாளம் தனிமை பெற்றுப் பெருங்காலமாகவில்லை. ஜைனர்கள் வம்புக்குண்டாக்கிய தமிழுஞ்சமஸ்கிருதமுங்கலந்த மணிப்பிரவாளம் பிறந்தகாலத்தல்ல வோ மலேயாளம் அன்னேவயிற்றில் நின்றும் வந்ததென்றையங் கொள்ளுகின்றேன். அம்மணிப்பிரவாள நடையை மலேயாளப்புல வர்கள் இப்போழ்து மிகப்பெருமையுடன் தழுவிவருகின்றுர். மேற் கூறிய காரணங்களால் வஞ்சியென்னும் திருவஞ்சைக்களமிக்காலத் தில் மலேயாளபாடை நடைபெற்றுவருங் குட்டநாட்டிலிருந்தபோ திலும், இருகாப்பியங்களுமுண்டான காலத்து அவ்விடத்துத்தமிழ் மாத்திரம் வழக்காயிருந்தது.

*

16. இனியுமாராய்வாம். மணிமேகலையிற் சிலப்பதிகாரத்தைவிட அதிகமாக வடமொழிகளை உபயோகப்படுத்தியிருந்தபோதிலும் இருகாப்பியங்களிலும் பிரயோகிக்கப்பட்டிருக்கின்ற பகுபதங்களும், பகாப்பதங்களும் ஓர் மாதிரியாகவேயிருக்கின்றன. இவைகள் இப்போழ்து மிக்கவாறும் மேன்மைபெற்ற தமிழ்நூற்களிற் காண்பதல்லாது பெரும்பான்மையுந் தமிழ்நாட்டிற் பேச்சுவழக்கத்திற் காண்பதரிது. ஆனால் அவை மலையாளமொழிப்பேச்சுவழக்கில் இற்றைக்குக் காணப்படுகின்றன. அவைகளிற் சிலவற்றைமாத்திரம் யாதொரு முறையின்றி இவ்விடத்தெடுத் துரைப்பாம்.

காவு - சோலை.

இப்பதம் மலையாளத்திற் பெரும்பான்மையும் வழங்குகின்றது. மணிமேகலை 28-வது காதை, 207-ம் வரி.

கடலாட்டு - சுவாமி கடலின்கட் சென்று நீராடுதல். கேரளத்தின்கண் கோயில்களில் விழாநடாத்தி பத்தாந்தினத்தில் ஆறாட்டு நடத்திவருவது வழக்கம்; நீராடல் கடலிலாயினும், ஆற்றிலாயினும் ஆறாட்டென்றேகூறுவர். சிலப்பதிகாரம் ஆறாம்காதை நோக்குக.

படுகாலை—துன்பம்; சில, 19-வது காதை, 5—ம் வரி. இது மனசிலோ, சரீரத்திலோவுண்டாகின்றதுன்பம். இப்பகுபதம் பிற்கூறிய கருத்தைக் குறிப்பிட்டு மலையாளநாட்டில் வழங்குகின்றது.

துன்னகாரர்
துன்னல்வினைஞர் } தையற்காரர்.
சில. 5-வது காதை. 32-ம் வரி.
மணி. 28 ,, 39 ,,

பீடிகை - கடை.
சில. 5—வது காதை. 41-ம் வரி.

அங்காடி - கடை.
சில. 5-வது காதை. 63-வது வரி.
,, 23 ,, 150 ,,

தொழுது — வணங்கி, கும்பிட்டு.
மணி. 4-வது காதை. 62—ம் வரி.

மலையாளத்திலொருவரை மற்றொருவர் காணுஞ்சமயத்திற் கும்பிடுதலைத் தொழுதலென்று கூறுவர்.

உளண் - சாப்பாடு.
மணி. 5-வது காதை. 45-ம் வரி.
இது பெரும்பான்மை வழக்கம்.

பிழைத்தல் - தவறுதல்.
சில. 20-வது காதை, 77-ம் வரி.

மலையாளத்திலிதை வினைச்சொல்லாகப் பிரயோகித்தல் பெருவழக்கு.

மாணி - விவாகம் செய்யாத பிராமணச் சிறுவன்.
சில. 9-வது காதை, 29-வது வரி.

இச்சொல்லை மலையாளத்திலுங் கன்னடத்திலு மொரேகருத்துப்பட உபயோகப்படுத்துவர்.

பொதி - மூட்டை, முடிச்சு.
சில. 16-வது காதை. 116-ம் வரி.

இப்பதந் தமிழ்நாட்டில் எருதின்மேலோ, குதிரையின் மேலோ போடப்படும் சுமைகட்கு உபயோகப்படுத்தப்படும். மலையாளநாட்டில் எவ்வித மூட்டைகட்கும் அப்பதம் உபயோகப்படும்.

எக்கல் - ஆற்றுநீருதவும் வண்டல்.
சில. 25-வது காதை. 25-ம் வரி.

கூவைநீறு - Arroo Rootமா (அரோட்மா)
சில. 25-வது காதை. 42-ம் வரி.

அடைக்காய் - பாக்கு.
சில. 16-வது காதை. 55-ம் வரி.

இங்ஙனம் சிலவற்றை மாத்திரம் எடுத்துக்கூறினும். இனியுரைக்கின் பத்திரிகை நிறைந்துவிடும். மேற்கூறிய உதாரணங்களாலுமிப்போழ்து, மலையாளமொழி நடைபெற்றுவரும் கேரளத்தில் தமிழ்நடை பெற்றுவந்ததாய்த் தெளிகின்றது.

17. மேற்கூறியவற்றால் வஞ்சிபென் றிருகாப்பியங்களிலும் பன்னியது திருவஞ்சைக்களத்தையே: அவ்விடத்து 1800 வருடங்கட்குமுன் தமிழ் நடைபெற்றுவந்தது.

அக்காலத்திற் றன்வழிமொழியாகிய மலையாளம் தன் அன்னையின் கருப்பைபக்குட்புகவுமில்லை. ஆகையாற்றிருவஞ்சைக்களத்தின் குணபாலின்கண்ணுள்ள அரண்மனையில் வீற்றிருந்த இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை அவ்விடத்து வைத்தாக்கினரென்பதற்கையமில்லை. சாத்தனருக்கு மரசகுடும்பத்திற்கு நேர்ந்திருந்த உறவினலும் மேற்கூறப்பட்ட வேறுகாரணங்களாலும் மணிமேகலையையும் அவ்விடத்துத்தானே யுண்டாக்கியிருக்கவேண்டும். எங்ஙனமாயினு மதன்பதிகத்தால் அஃது அரங்கேற்றப்பட்டது இளங்கோவடிகளிருப்பிடத்திலென்பதற்குச் சந்தேகம் தோன்றவில்லை.

18 கூலவாணிகன் சாத்தனர், மதுரையிலிருந்ததாக சிலப்பதிகாரத்தாற் காணப்படுகின்றமையாலும் கடைச்சங்கப் புலவர்களிலொருவராக இருந்தபடியாலும் அவ்வூர் வாசியல்லவோவென்றும் அவ்விடத்திற்றனே மணிமேகலை வரையப்படவில்லையோவென்றும், ஐயங்கூறும். அவ்விதமல்லவென்பதற்கு 11-ம் வகுப்பினிறுதியிற் சிலகாரணங்களையியம்பினும். மேலும் சிலப்பதிகாரத்துப் பதிகத்தில் 10-ம் வரியில்,

'அவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்'

என்றதனுலும்' அதே கருத்தைக்கொண்ட அக்காப்பியத்தில் 25-வது காதையில் 65-ம் 66-ம் வரிகளாலும் சாத்தன் போக்குவரத்தனைப்போலல்லாது, நெருங்கிய உறவினரைப்போலரசன் செங்குட்டுவனுடனுறைந்திருந்ததாகக் காணப்படுகின்றது. அக்காரணத்தால் 4-ம் வகுப்பிற் கூறியதுபோல அவர் அரசாங்கப் புலவராயுமிருந்தார். ஆகையால், மணிமேகலையின் பிறப்பும் திருவஞ்சைக்களமே. அங்ஙனமல்லாவிடினும் முன்னியம்பியதின்வண்ணம் அரங்கேற்றியவிடம் அஃதென்பதற்குச் சந்தேகமில்லை.

தா. பொன்னம்பலம் பிள்ளை.
M. R. A. S.

உ

கவிமரபு.

உள்ளது தன்னையுமமைக்காமையாவது:—ஒரு பொருள் உண்மையாகவே உளதாயினும், அதனை இல்லதுபோல வைத்து, வழங்காது விடுத்தொழிதல். இளவேனிற்கண் சாதிமலரும், மாரிக்காலத்தில் மல்லிகையும், பகலிலே ஆம்பல் மலர்ச்சியும், அசோகத்திற் காயுங்கனியும், சந்தனத்திற் பூவொடு காயுங்கனியும், காமிகள் பற்களிலும் மிகுந்த அரும்புகளிலும் செந்நிறமும், மாதர்க்குக் கருநிறமும், முலைகட்குத் தளர்ந்துவிழு சரிவும் உளவாயினும், அவையிற்றை இல்லனபோலக்கொண்டு வழங்காது விடுத்தலென்க.

நியமத்தாலமைத்தலாவது—ஒருபொருள் சிலபல வகைகளானமையுமாயினும், அவற்றுள் மற்றவற்றை விலக்கி ஒன்றனையே நியமமாகக்கொண்டு அப்பொருளினை வழங்குதல். அஃது 'இமயமலையில் மாத்திரமே பூர்ச்ச *ஓலையையும், மலயமலையில்மாத்திரமே சந்தனத்தையும் வருணித்தல்' எனவரும். பூர்ச்ச ஓலையும், சந்தனமரமும் மற்றைய மலைகளின் கண்ணும் உளவாயினும், அவற்றை அங்ஙனம் வருணிக்காது ஹிமவத்மலயமலைகள் இரண்டின்கண்மட்டுமே முறையே வருணித்தல் காண்க.

பொதுப்படக் கூறியவழி "குடை, ஜலம், துவஜம், புஷ்பம், ஆடை, சாமரம், அன்னப்புள், ஹாரம், கொக்கு, சாம்பலாகிய இவற்றிற்கு வெண்மை. மலை, மரம், மேகம், கடல், படர்கொடி, புகை, சேறு, கேசம், வண்டு, குயில், காகம் என்பவற்றிற்கும், நாணம், வெகுளி, பழி, ரோஷம், அழிவு, அழுகை என்பவற்றிற்கும், காமனுக்கும், அரக்கருக்கும் கருமை. நெல், தவளை, மரவுரி, இவற்றிற்குப் பொன்மை. இரத்தினம், பந்தூகம், ஜபாபுஷ்பம், (உலோக) தாது, மாணிக்கம், சூர்யன், கொவ்வைக்கனி, தாமரைமலர் தளிர், மாதுளை, நகம், இவற்றிற்குச் செம்மையாகிய இவற்றை வருணித்தலும்,"

---

* பனையோலை போல ஓர்வகை எழுதோலை. வங்க (Bengal) நாட்டிலுள்ள எட்டுப்பிரதிகள் இவ்வோலையிலே அமைந்துள்ளனவாம்.

"சந்திரன் சிவபிரான் சென்னியின்கண் வெகுகாலமாகத் தங்கியுளதாயினும், அது தனக்குக் குழவிப்பருவம்: முன்பனி பின்பனியொழிந்த காலத்திலே தாமரை: இளவேனிற்கண்ணேயே குயில்கூவுதல்: கார்காலத்தின்கண்ணேயே மயில் ஆர்த்தலும் ஆடலும் ஆகிய இவற்றை வருணித்தலும்,"

"கேசாதிபாதாந்தமாக மானிடர்களையும், பாதாதிகேசாந்தமாகத் தேவர்களையும் வருணித்தலும்" இது.

விகற்பத்தாலமைத்தலாவது இரண்டு மூன்றுவகைகளானமைவதோர் பொருளினை அவற்றுள் யாதாயினுமோர்வகையானெடுத்துக் கூறுதல்.

அது "செல்வத்தினிடத்தும் திருமகளிடத்தும் பசுமை கருமையினையும்: தீ, பூந்தாது, பொன், மின்னல்களிடத்துப் பொன்மை, செம்மையினையும்: கடைக்கண்ணிலே வெண்மை கருமையினையும்: லோத்ரமலரிலே வெண்மை செம்மையினையும்: சந்திரனிடத்திலே மான் முயல்களையும்: காமன் கொடியிலே மீன்மகரங்களையும் விகற்பமாக வருணித்தல்" என்பதாம்.

"மூன்றாக, ஏழாகப், பதினான்காக உலகுகளையும்: நான்காக, எட்டாகப், பத்தாகத்திக்குகளையும்: நான்காக, ஏழாகக்கடல்களையும்: நான்காக, பதினான்காக, பதினெட்டாகக் கல்விகளையும் கூறுதலும்," இது.

இனிக் 'காளையர்கழுத்தில் ஹாரமும், பகலிலே தாமரையும், இரவிலே ஆம்பலும், இருள்தனக்கு வளர்ச்சியும், போரில்தோல்வியுற்றானுக்குத் துயரமும், பகைமையும், எளிமையும், அபிசாரமும், பொறுமையும், உடம்புவெளிறலும், விஷபானமும், தவமும், ஜபமும் முதலிய வருணித்தலும்,"

"காமனுக்கு ஞாண்வண்டினம், வில்லம்புகள் மலர்கள். அவ்வம்புகளால் *யுவஜனங்களின் இருதயம் ஈர்க்கப்படுகின்றது. அது விரகதாபத்தால்ஈர்க்கின்றது. யானை, மேகம், சங்குமுதலியவற்றினி

* 'யுவ' என்பதற்கு ஏகசேடனால் ஆண்பாலும் பெண்பாலும் கொள்க. யுவதிஶ்ச யுவா ச - யுவாநௌ என ஏகசேடன் வருமாறு காண்க.

ன்று முத்துப்பிறக்கின்றது.† ஒலியால் மலைமுதலியனவும், மாதரது கடைக்கண்களால் ஆடவரது நெஞ்சும் பிளக்கப்படுகின்றன எனவும்,

"காடாந்தகாரத்தை 'ஊசியாற் கீறற்பாற்று' 'பொருள்களைத் திற்றுவது' எனவுங் கூறுதலும்"

"சிவபிரானை 'சூலி' 'சந்திரமௌலி' என்பதன்றி 'சர்ப்பி' 'கங்காமௌலி' எனவும், சந்திரனை 'சசி' என்பதன்றி 'ஹரிணி' எனவும் கூறுமையும்" கவிசம்பிரதாயமென்டர். (சூலமுடையோன் - சூலி. சர்ப்பமுடையோன் - சர்ப்பி. சசம் - முயல்; அஃதுடையோன் சசி. ஹரிணம் - மான்: அஃதுடையோன், ஹரிணி.)

அன்றியும், 'மகாப்பிராமணன், மகாவிருஷ்டி, மகாபோஜ்யம், மகௌஷதம், மகாவழி' என்பவற்றிற்கு 'செட்டபிராமணன், கெட்டமழை, கெட்டஉணவு, கெட்டமருந்து, கெட்ட்வழி' எனமுறையே பொருளாதலுங்காண்க.

இன்னும், கேளாதவற்றைக் கேட்பனபோலவும், உணராதவற்றை உணர்வனபோலவுமாகிய இன்னோரன்னவற்றைக் கூறுதல்

உறுப்புடையதுபோல்உணர்வுடையதுபோல்
மறுத்துவைப்பதுபோல்நெஞ்சொடுபுணர்த்துஞ்
சொல்லாமரபினவற்றொடுகெழீஇச்
செய்யாமரபிற்றொழிற்படுத்தடக்கியும்
அவரவருறுபிணிதமபோலச்சேர்த்தியும்
* * * * * *
இருவர்க்குமுரியபாற்கிளவி."

"ஞாயிறுதிங்கள் அறிவேநாணே
கடலேகானல்விலங்கேமரனே
புலம்புறுபொழுதேபுள்ளேநெஞ்சே
யவையலபிறவும்நுவலியநெறியாற்
சொல்லுநபோலவும்கேட்குநபோலவும்
சொல்லியாங்கமையுமென்மனார்புலவர்."

என்ற தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரங்களால் இனிது அறியலாகும்.

த. சுந்தரராஜசர்மா.

---

† முத்துப்பிறக்குமிடங்கள் இன்னவை என்பதை இத்தமிழ்க்கவியாலுமறிக. "தந்திவராகமருப்பிப்பிபூகந்தழைகதலி, நந்துசலஞ்சலமீன்றலைகொக்குநளினமின்னார், கந்தாஞ்சாலிகழைகன்னலாவின்பால்கட்செவிகா, ரிந்துவுடும்புகராமுத்தமீனுமிருபதுமே."

புத்தகக் குறிப்பு.

இலங்கைச் சரித்திர சூசனம்:—நம் பரதகண்டத்தை யடுத்துப் பல்வகை வளனும் வாய்ந்த இலங்காதீபத்தின் சரித்திரம் நம்க்கு முற்றும் அந்நியமானதன்றி அகப்புறமானதொன்றாகும். இத்தீவத்தின் பூர்வீகவரலாறுகள் பெரும்பான்மை ஆரியகண்டத்தோடும் நெருங்கிய உறவுடைமையால், அவை, சரிதவாராய்ச்சி செய்யும் நம்மவர்க்குப் பலவாற்றானும் பயன்விளைப்பனவாகும். செந்தமிழ் வளர்த்த செவிலிச்சங்கத்தின் காலமுதலிய சிலவரலாறுகள், அவ்விலங்கைப் பூருவநூலாகிய மகாவமிசம் தீபவமிசங்களானன்றோ இனிதுவிளங்கின! இத்தகைய வரலாற்றுநூல்கள் ஆங்கிலப்பயிற்சியுடையார் அறிவாராயினும், தமிழராயினோர் பெரும்பாலார்க்குத் தெரியவாரா என்பது திண்ணம். இலங்கைத் தமிழர்க்கு உபயோகமாக ஏறக்குறைய 20 வருடங்களுக்கு முன்பே இப்போது நம் தமிழ்ச்சங்கவித்துவ சிகாமணிகளுள் ஒருவரான ஸ்ரீமத் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையவர்களால் அத்தீபசரித்திரசூசனம் வெளியிடப்பட்டது. சமீபத்தில் அதனைப் புதுக்கி 100-பக்கங்கட்கு மேலாகப் பிள்ளையவர்கள் இரண்டாமுறை பதிப்பித்துள்ளார்கள். இப்புத்தகம் இலங்கைச்சரித்திரசூசனம், விஜயவமிசகாலம், பறங்கிக்காரர் காலம், ஒல்லாந்தர்காலம், ஆங்கிலேயர்காலம் என்னுமைந்ததிகாரங்களுடைத்தாய் விஷயசூசனத்தோடும் முடிவுறுகின்றது. இதனடை இனியசொற்செறிவுடைமையால் இன்பம் பெரிது விளைக்கின்றது. ஆங்கிலகலாசாலைகளிற் பண்டைநிலை யறிதற்பொருட்டு ரோமசரித்திரத்தையும் வேறுசிலவற்றையும் பாடமாகவைக்கும் நம் சர்வகலாசங்கத்தார் தெனனிந்தியாவை யடுத்து அதனோடு முன்னைக்காலமுதலுறவுகொண்ட இலங்கைச்சரித்திரச்சுருக்கமொன்றும் கீழ்வகுப்புப்பாடமாக நியமிப்பின், ஏனையவற்றில் எதிர்பார்க்கும் பயன் இதன்கண்ணுமுண்டென்பது திண்ணம். பிள்ளையவர்களியற்றிய இச்சிறு நூல் அதற்கு மிகவுமேற்றதொன்றாம். இந்நூலை நம்மவரெல்லாம் படித்து மகிழ்வாராக.

தண்டியலங்காரவுரை;—இது தமிழ்த் தண்டியலங்காரத்தின் பழையவுரையைத் துணைக்கொண்டு, வடநூற்போக்கைப் பெரும்பான்மை தழுவி எழுதப்பட்டது. கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெரிதும் பயன்படுமாறு சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் பொருந்த யாழ்ப்பாணத்துச்சுன்னாகம் ஸ்ரீமத்-குமாரசுவாமிப்பிள்ளையவர்களால் உரை இயற்றப்பெற்றது. சொல்லணியுட் சித்திரகவிகட்கெல்லாம் மாதிரிகைப்படம் வரையப்பட்டுள்ளன. இது, மதுரைத் தமிழ்ச்சங்கத் தக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்

தேவரவர்களது பேரபிமானத்தைப் பெற்று வெளிவந்தது. நல்ல கடிதத்தில்சிறக்க அச்சிடப்பெற்றது. அலங்காரப் பயிற்சியுற விரும் புவோர்க்கெல்லாம் அநுகூலியாவது. இதன் விலை. 1—0—0.

தமிழ்வியாசம் ;—நமது தமிழணங்கின் அருமைபெருமைகளைப் பற்றி வித்துவான்கள் பலராலும் அவ்வக்காலங்களில் வெளியிடப் பெற்ற வியாசங்களைப் படித்துவந்த தமிழ்மக்கட்குச், சமீபத்திலும், அவ்வாறுய நூலொன்று சிறந்த வித்துவானொருவரெழுதியுள்ளா ரென்பது கேட்கப் பிரியமிகும் என்பது திண்ணம். இந்த வியாச மியற்றியோர் சென்னையிலிருக்கும் ஸ்ரீமத்-தி. செல்வக்கேசவராய முதலியாரவர்கள், M. A., இவ்வியாசத்தில், தமிழின் ஆதிநிலையும், பண்டைத் தமிழ்மக்களின் வழக்கவொழுக்கங்களும் இனிய செந்தமிழ் நடையில் மேற்கோள்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இத்தகைய வியாசங்களே, செந்தமிழ் மாட்சியை புலப்படுத்துவதோடு, அதன் நாகரிகவிருத்திக்குப் பெரிதும் ஏற்றனவாகும். முதலியாரவர்கள் தமதாராய்ச்சித் திறனால் இவ்வாறு சிறந்தபலவிஷயங்கள் எழுதி வருகின்றமை பலருமறிவர். அவர்கள் இவ்வியாசத்தின் இறுதியில் தமிழிலிதுகாறுமுள்ள சிறந்தநூல்களையும், அவற்றின் ஆசிரியர்களை யும், அவர்களைப்பற்றிய முக்கிய குறிப்புக்களையுங்கண்டு நீண்டதோர் 'அட்டவணை' எழுதிச்சேர்த்துள்ளது, இந்நூலிற்கோர் பேரணியாம்.

சாவித்திரி ;—இப்பெயர்கொண்டதோர் சரித்திரம், சென்னை 'யதார்த்தபாஸ்கரன்' பத்திராதிபர் ஸ்ரீமத். விசுவூர்-முத்துக்குமார சுவாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது. கற்பினுக்கரசியென் றுலகம்புகழும் சாவித்திரியின் திவ்விய சரிதத்தை, வேறுபட்டாது கதைப்போக்கைத் தழுவி, மாற்றியுங் கூட்டியும் எளிய இனியநடை யில் இயற்றப்பெற்றது. இந்நூலை நம்நாட்டுப் பெண்பாலாரும் ஏனை யோரும் பெற்றுப்படித்து, அப்புண்ணிய சரிதத்தால் ஆம்பயனை அடைவார்களாக.

இரத்நமாலிகை;— இந்நூல் வேதாந்த விஷயமான அரிய விஷ யங்களை பிரச்நோத்தரங்கள் முகமாக விளக்குவது. இஃதியற்றி யோர் மேற்குறித்த முத்துக்குமார சுவாமி முதலியாரவர்களேயாவர். இதனாசிரியர், லோகோபகாரத்தைக் கருதி இனியநடையில் யாவரும் அறிய வேதாந்தசம்பந்தமான பல விஷயங்களை எழுதியிருப்பதற்கு நாமனைவரும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம். இந்நூல் சீமையி லுள்ள கனம் ஜி. யூ. போப்பையரவர்கள் தமிழுக்குச் செய்துவரும் பேருபகாரத்தின் ஞாபகார்த்தமாக சமர்ப்பிக்கப்பட்டதாகும்.

ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

திருச்சிற்றம்பலம்.

திருச்செந்திற் கலம்பகம்.

விநாயக வணக்கம்.

நிலம்பக வீழ்சடை நீறணி வான்மைந்த னீடயிலோன்
கலம்பகஞ் செந்தமிழ்ப் பாமாலை யாற்செந்திற் கண்மருவு
சிலம்பக மெல்லடி வல்லபை கேள்வனைத் திங்கள்வெண்கோட்
டிலம்பக யானை முகத்தானை வாழ்த்தி யியம்புவனே.

நூல்.

மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா.

நாலடித்தரவு—உ.

சொல்வாய்மை தருங்கடவுட் சுருதிகரு தியபொருளைப்
பல்சான்ற பெருங்கேள்விப் பனிமலய முனிவினவ
வம்புயனு மறியாத வறமுதலாந் தமிழ்மூன்றுஞ்
சம்புவுமன் றுடனுணரத் தருவோய்நீ முருகோனே
கண்சுருங்க விரித்தபசுங் கலவமயி லெனத்திருமுன்
மண்சுருங்க விரித்தகுண மணியாழி யெழுபரித்தே
ரந்தினக ரனைத்தடுக்கு மணிமணிமா ளிகைப்புரிசைச்
செந்திநகர்ச் சினகரத்துத் திருத்தகவீற் றிருந்தனையால்.

ஈரடித்தாழிசை—௩.

ஊனாகி யுயிராகி யுணர்வாகி யுணர்வுதவுங்
கோனாகி வினையளவுங் குணத்தளவுந் தனக்களவாய்
விரவாதி யந்தமிலா வெளியாகித் தெளியாது
பரவாதி யருமுலவாப் பாமறையுந் தாமறைய
வாக்குமன முங்கடந்து மண்ணொடுவிண் ணிடத்தியற்றும்
போக்குவர வொழிந்துவிழிப் புலத்துருவு மருவமுமாய்
வேதாந்தஞ் சித்தாந்தம் விளங்குகலாந் தந்தெளிந்த
போதாந்த நாதாந்தப் புறத்தினுமப் புறம்போகி

யுணர்ந்தாரு முணராரு முணராம லுயிர்க்குயிராய்ப்
புணர்ந்தாலு மாருறு புலனலமுங் கலவாது
நின்றதனிப் பரம்பொருளா நினக்கொருபே ரிலையெனினு
மின்றுகுக னெனப்பெறுவ திளையோய்நின் விளையாட்டே.

ஓரடி அராகம்—ச.

அருமறை முறையிட வறைகழல் பறையிட வடியரு ணினைவதுன்னடி
யொருமையி னிருமையு முதவிய மதியென வொளியொடு குளிர்வதுன்முகம்
வருமுலை வனிதைய ரிருவரு மயிலின மழையென விழைவதுன்னெழில்
பெருகலை கெழுகலி கடலினு மெழுமடி பெருகுவ துருகுநின்னருள்.

பெயர்த்தும்-ஈரடித்தாழிசை—௬.

தாயென்றுந் தந்தையென்றுஞ் சகமீன்று தருமுனக்குச்
சேயென்று பின்னுமொரு திருநாமம் வருமாறென்?
முந்திலென்றே யடியருள முளரிதொறு மிருந்தாய்க்குச்
செந்திலென்றே யுரைக்குமொரு திருப்பதியும் விருப்புளதே!
மயிலேற்று வருங்கால மல்லானீ கொல்லாயோ
மயிலேற்ற மேனுனக்கு மற்றேற்றம் பெற்றிலையோ ?
வோராறு பனிமதியி னுடுபவள வரையினிரைத்
தீராறு தினகரு மிடையிடையே யுதித்தாங்குக்
கருணைபொழி திருமுகமுங் கணமணிக்குண் டலநிரையுந்
திருநெடுந்தோள் களுங்கமலச் சேவடியுந் தாவடிவும்
பாடாது நினையாது பரவாத வெனக்குவினை
கூடாத தொண்டரொடுங் கூட்டியுநீ காட்டினையால்.

நாற்சீரடி அம்போதரங்கம்—உ.

பிறந்தது மிறந்ததும் பெரும நின்புகழ்
மறந்தது மல்லது வணங்கி லேனினைக்
காமமும் வெகுளியுங் களிமயக்கமுந்
தாமிடை கலந்தெனைத் தலைம யக்கலால்.

நாற்சீரடி அம்போதரங்கம்—ச.

உண்பது முடுப்பது முவந்து தேடினேன்
கண்படை நனவினிற் கலங்கி வாடினே
னுய்திற மிதுவென வுணர்வு போயினேன்
செய்திற மிதுவெனுந் தெரிவில் பேயினேன்.

முச்சீரடி அம்போதரங்கம்—௪.

எவ்வா றெனையுய் யக்கொள்வா
யெழுதா மறையின் றிறத்துள்ளாய்
செவ்வா னனையான் றிருப்பிள்ளாய்
தெரியா தினியுன் செயல்விள்ளாய்.

இருசீரடி அம்போதரங்கம்—அ.

மெய்யுநீஇ பொய்யுநீஇ விண்ணுநீஇ மண்ணுநீஇ
யையைநீஇ செய்யைநீஇ யாதிநீஇ சோதிநீஇ.

தனிச்சொல்.

என வாங்கு.

ஆறடிநேரிசையாசிரிப்பா—சுரிதகம்.

நீயல தில்லை யாவையு முலக
மற்றவற் றிடையா னவத்துடற் பொறையொடு
கறங்கெனத் திரியாது பிறங்குசுற வெறியு
நந்தூர் கடற்றுறைச் செந்தூர் பரவுவன்
காமரு பூந்தொடைக் கடம்பணின்
றாமரை மலரடி தருகமா வெனவே. (௧)

வெண்பா.

எனதே குகன்செந்தி லேத்துதொழி லன்றோ
றனதே யெனையாளுந் தன்மை—வினவின்
மறத்திமண வன்புமுதல் வாழ்வையெலா நெஞ்சே
குறத்திமண வன்புகழே கொள். (௨)

கலித்துறை.

கொள்ளார் பவப்பிணி கூற்றுக்கஞ் சாரன்பர் கூட்டமல்லா
னள்ளார் பிணியி னலிவு படார்தெய்வ நாளுமற்றோன்
றுள்ளார் முருகன்செந் தூர்பிரி யாதவ னொண்கமலக்
கள்ளார் விரைமலர்த் தண்டையந் தாடொழக் கற்றவரே. (௩)

ஆசிரியவிருத்தம்.

கற்றாலு நீடூழி கழித்தாலுங் கழியாத கரையில் வாழ்வு
பெற்றாலு முருகனடிக் கன்புபெறா தவருலகிற் பிறவி தீரா
ரிற்றாலுங் கலிநலிய விரந்தாலும் பேதையரா யெழுத்தா றுள்ளத்
தற்றாலு மவனிருக்குஞ் செந்திலென்றார் மூந்திலென்று மடைவர் தாமே.

ஆசிரியப்பா.

தாமரை பயின்ற நான்முகக் கடவு
ளெழுதா மறைப்பொருட் பழுதாங் குரைப்ப
வீங்குமணிக் கடகந் தாங்குதிணி தடக்கை
முன்வருத் தியவா றின்னமும் வருத்த
விரும்பிய தாலெனத் திரும்பிட நஞ்சேய்
பாயிருள் பருகும் பல்கதிர்க் குழவி
ஞாயிறுசுற வெறி நாண்முரி திரைமுகட்
டெழுவது போல மழைதழை கலாபச்
செறிமயிர்ச் சிறையார் பொறிமயிற் புறத்துச்
சேயொளிமேனி திகழவீங்கெழுந்தனை
தெய்வவான் கருணியு மொய்வரை யருணியுந்
தாவலங் கயிலுஞ் சேவலங் கொடியு
மாறு முகமு நீறணி புயங்களும்
பண்டைய மறைபுகழ் தண்டையந் தாள்களுங்
கந்தநின் னாமமுஞ் செந்திலம் பதியும்
வணங்கவு நினைக்கவும் வாழ்த்தவு
மிணங்கலிற் பரவினே னெனைவிதித் ததற்கே. (௫)

வெண்பா

அதற்கிதற் கென்றுள் ளவம்போக்கி யாக்க
முதற்பொருட்கு மின்றி முயன்று—நுதற்கணவன்
சந்ததியா னஞ் செய்யான் றானுவந்து செந்திநகர்
வந்ததியா னஞ்செய்யா மல். (௬)

புயவகுப்பு-ஆசிரிய வண்ண விருத்தம்.

மலர்தலை ஞாலத் தலகில வாமுற் றுயிர்களு முந்திக் கண்பண்டு தந்தன
மறைபகர்வாய்மைத்திசைமுகனோவுற்றிடுமுறைதண்டித்தன் றங்கைகன்றின
மகபதி வானத் தரசுவ ழாமற் றிருமுடி யன்பிற் கொண்டும்பு னைந்தன
வழிபடு கீரற் கழிசிறை தீரப் பரிவொடு முந்திச் சென்றஞ்ச லென்றன
குலமடமான்மெய்ப்புதல்வியும் யானைக்குமரியுமொன்றொருத்தின்பங்கவர்ந்தன
குழையுமென் வாய்மைத் தமிழுந னீபத் தொடையலு மொண்பொற் சந்து
[ந்த வழ்ந்தன
குரைகழ லடித் தொழுநெறி சேர்கோத் தடியவர் தங்கட் டுன்பங்களைந்தன
குவிமுகை வேலைக் கவிழிணர் மாவைத் தடிதலு மன்றிக் குன்றும்பிளந்தன
வுலகுண ராமுத் தமிழுணர் நீதிக் குறுமுனி வந்தித் தென்றும்புகழ்ந்தன
வுலைமலி வாகைத் திருநெடு வேலிற் சிரமவி தங்கட் கங்கங்கி யைந்தன

வுமைமுலை பீர்விட் டொழுகிய பாலுக் கழுதுயர் பொன்றக் கொண்டங்க [ணுந்தின
வருகெழுகோலத் திருமுது சூரைக்கிளையொடு மஞ்சக் கொன்றங்கம் வென்
கலவம யூரத் துரகத மேறிப் புவனியு மெண்டிக் கெங்குந் திரிந்தன [றன
ககனவ ளாகத் தளவிய கோழிக் கொடிவளர் கம்பத் தம்பம்பொ ருந்தின
கலைமதி போலத் திருமுக நீள்கட் கடையருள் பொங்கிச் சிந்துந்தி பம்பின
கடலலைவாய்முத்தினவளை வீசிக்கரைபொரு செந்திற் கந்தன்புயங்களே.(எ)

கலித்துறை.

புயமா றிரண்டுக்கும் பொன்னணி யாம்புள்ளி மான்மகட்குங்
கயமான் மகளுக்குங் கண்ணிணை யாங்கடுங் கூற்றுவந்தா
னயமாய தொண்டர்க்கு நற்றுணை யாஞ்செந்தி னன்னகர்மே
வியமான் மருகன் றிருக்கரத் தேந்திய வேற்படையே. (அ)

கலிவிருத்தம்.

படைக்கணார் மையனோய்ப் படுவ தல்லது
சடைக்கணான் பரகதி காணா மாறுண்டோ
வுடைக்கணா திபன்றனக் கிளஞ்செந் தார்த்தமிழ்த்
தொடைக்கணான் றுயர்புயத் தோகை பாகனே. (௯)

குறளடிவஞ்சிப்பா.

பாகந்தரு பனிவான்மதி
தாரகையொடு கார்முகில்விடைப்
பொருதெனவளை யுடனிலகிய
நவமணியுமிழ் சலிகெழுபுனற்
றிரைபொருமொலி முரசுடனதிர்
பைந்தமிழ்வளர் செந்திலின்வரு
சேயோன்
திருந்தடி துணையெனச் சேர்பவர்
பொருந்துவர் யாரும் புகலரு நெறியே. (௰)

கலிப்பா.

நெறிக்குஞ்சித் தலைமறலி நெருங்கியெதிர் வருங்காலஞ்
செறிக்குஞ்சித் திகடருநின் செந்திலுமென் புந்தியதே
பொறிக்குஞ்சித் திரத்தினுடைப் பொரியாகப் புகுந்து கொத்திக்
கொறிக்குஞ்சித் திரச்சரணப் படைச்செவ்வேற் கொடியோனே.(௰௧

வண்டோச்சி மருங்கணைதல்—ஆசிரிய விருத்தம்.

கொடியாநின் றிடைதேய்ந்து கொழுங்கலவைத் துணைமுலையுங்குழலுந்தாங்கி
யொடியாநின் றுளதின்னு முமக்குமிரங் காதவுள்ள முளவோ வண்டீர்
வடியாநின் றிலங்கிலைவேல் வலனேந்தி செந்திலரு மருந்தன் னுடன்
முடியாநின் றளியெனுஞ்சொன் முடியாநின் றநுராக முயல்கின் றீரே. (மஉ)

வண்டுவிடுதூது—வெளிவிருத்தம்.

ஈர நாண்முகை யிளமுலைப் பசப்பொழித் தளியீரே
சூர னுள்விழித் துணையிணை கொள்வதற் களியீரே
நார நாளமென் னளினநீர்ச் செந்தில்புக் களியீரே
யார நாள்வரு வேங்கையின் மலர்கொணர்ந் தளியீரே. (மங)

வஞ்சித்துறை.

அளியாலுஞ் சோலை
யொளிசேர்வான் செந்தூர்
தெளிவாயா னெஞ்சே
யழியாவீ டுண்டே. (மச)

மேகவிடுதூது—கலித்துறை

உண்டு வாருதி பசுஞ்சிறைக் கிளிமயி லுருவாகி
யெண்டி சாமுகம் புதைத்தயி லெனமினி யிமைத்தீரேற்
கண்டு நானிரு கண்களு முள்ளமுங் களிகூரக்
கொண்டல் காளினிச் செந்தில்வாழ் குமரனைக் கொணர்வீரே. (கரு)

அம்மானைமடக்குத்தாழிசை.

வீரனெடு வெள்வேல் வியன்செந்தி லெம்பெருமான்
பாரிலுயி ரெல்லாம் படைத்தனன்கா ணம்மானை
பாரிலுயி ரெல்லாம் படைத்தனனே யாமாகி
லாரணங்க ளன்கு மறிவனோ வம்மானை
யறிந்து சிறையயனுக் காக்கினன்கா ணம்மானை. (கசு)

இரங்கல்-வஞ்சிவிருத்தம்.

மான்மகள் காதலர் மஞ்சுருந்
தேன்மலி காவுயர் செந்தூரர்
கான்மண நாறு கடம்பேனும்
யான்மகிழ் கூர விரங்காரோ. (கஎ)

ஓரோலி வெண்டுறை.

காரோய் நிறத்தருகட் கறுவுடைக் கடுங்கூற்றங் கலந்த காலை
யாரோ விலக்குவா ரந்தோ நமரங்கா ளறிதி ரன்றே
நீரோ யுயப்போமா நின்று வலித்தீரேற்
கூரோய் வடிவேற் குமரன் குடநாட்டுச்
சீரோய் திருச்செந்தில் சென்று தொழுமினே. (கஅ)

வெண்பா.

தொழுதிரந்து வெம்பசியாற் சோர்ந்திடுவார் கைபார்த்
தழுதலமந் தேங்கி யலைவார்—முழுதும்
பெருகுகனை வாரிமணி பெய்திரைக்குஞ் செந்தில்
வருகுகனை வாழ்த்தா தவர். (கசு)

கலிப்பா.

வரங்கொண்ட வுமைமுலைப்பான் மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலருஞ்
சிரங்கொண்ட மறையிறைஞ்சுஞ் சேவடியுஞ் செந்தூரன்
கரங்கொண்ட வேலுமென் றன் கண்ணைவிட்டு நீங்காவே. (உ0)

பாண்—கலித்துறை.

நீங்காத நேயத்தி னீதைத்த தையலு நின்னையன்றிப்
பாங்காய பாண பிரிந்ததென் றூலுமை பாலன்செந்தில்
யாங்கா ணலமெனி லெம்மை வினவுதி யேதிலனாத்
தாங்காது நின்மதி துன்னூசி யின்றிறந்தான் பிழைத்தே. (உக)

ஆசிரியவண்ணவிருத்தம்.

பிழையாத தொண்டர் சிறிதேசெ யன்பு பெரிதாக நெஞ்ச மகிழ்வா
ருழையீனு மெங்கள் குறமாது கொண்க ருமைபாலர்தங்கு மிடமாம்
புழைவாய் திறந்து வளைசூலு ழைந்து பொழியார மிந்து வெனவே
மழைபோன்முழங்கி யலையாழி சிந்து வளமேவு செந்தி னகரே. (உஉ)

தலைவிகூற்று—வெண்பா.

நகைமதிய மேவடவை நாப்போலிவ் வண்ணந்
தகைமதியாய் நின்று தழல்வா—யகமகிழ்ந்து
கற்பகலை தந்தார் கடற்செந்தில் வாயெமக்குப்
பொற்பகலை தந்தார்முன் போய். (உ௩)

கலித்துறை.

போய்வத னாரம்ப மாடார் திருச்செந்தில் புக்குறையார்
சேய்மலர்த் தாளிணை சிந்தைசெய் யார்திரு மான்மருகன்
காய்சின வேலு மயிலுமென் னார்கடல் சூழுலகிற்
பேயறி வாளரொவ் வாறறுப் பார்தம் பிறப்பினையே. (உச)

தலைவிநெஞ்சொடுகிளத்தல்—ஆசிரியத்தாழிசை.

பிறர்வாய் வசையடங்கப் பிஞ்ஞகன்சேய் திண்டோ
ணறவார் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
சிறைவான் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே
குயில்வா யொலியடங்கக் கூத்தன்சேய் திண்டோ
ணயமாந் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
செயிர்தீர் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே
முந்நீ ரொலியடங்க முக்கணன்சேய் திண்டோ
ணன்னீர்த் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
செந்நீர் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே. (உரு)

கைக்கிளை—மருட்பா.

நெஞ்சே நுதல்வியர்க்கு நீடுகுகன் செந்திலன்னாட்
கஞ்சேல் விழிக ளவையிமைக்கும்—பஞ்சே
ரடிநிலந் தோயு மதனாற்
கமழுங் குழலிவள் கடலிடத் தணங்கே. (உசா)

பாங்கிவேண்டல்—வெண்பா.

அணங்கா மிவளுக் கவிர்மதிய மொன்றே
வணங்கா வருந்தென்ற லொன்று—வணங்கூ
ரிளமுருகா செந்திநக ரெந்தாய்வந் தாளா
யுளமுருகா வேயிசையு மொன்று. (உஎ)

தலைவியைவியத்தல்—கலித்துறை.

ஒன்றுடை யான்புலித் தோலுடை யான்மைந்த னேங்குபரங்
குன்றுடை யான்றிருச் செந்திலன் னார்குல வாழையிள
மென்றுடை யானடை யாலிடை யால்விழி வேற்கடையா
னின்றுடை யானிற்ப ராலெவ ரோனு நிலைகுலைந்தே. (உஅ)

௧0௧ வண்டினம் வெளவாத வாம்பலும் வாரிதழான்
வண்டினம் வாய்வீழா மாலையும்—வண்டின
பாராத பூந்தா ரணிதேரான் றுன்போத
வாராத நாளே வரும்.

இதுவுமது.

இ-ள். வண்டினங்கள் விரும்பாத * ஆம்பலென்னும் பெயரையுடைய குழலும், ஒழுகிய மலர்களிற்புக்கு வண்டினங்கள் வாய்வீழாத அந்தியாகிய மாலையும், வண்டினங்கள் புக்கொலியாத பூச்செயல்களையுமுடைய புரவி பூண்ட தார்மணிகளையுடைய புரவிகளாலே ஒப்பிக்கப்பட்ட தேரினையுமுடையான் வாராத நாளே வந்து என்னை நலியும்; எ-று. (௯)

௧0௨ மானெங்குந் தம்பிணையோ டாட மறியுகள
வானெங்கும் வாய்த்து வளங்கொடுப்பக்—கானெங்குந்
தேனிறுத்த வண்டோடு தீதா வெனத்தேரா
தியானிறுத்தே னுவி யிதற்கு.

இதுவுமது.

இ-ள். மான்கள் தம்பிணைகளைக்கூடி எங்கும் விளையாட அவற்றின் மறிகளுமுகள மழையெங்கும் பெய்து வாய்த்துவளங்கொடுப்பக் காடெங்குந் தேன்களும் தம்மொடுசார்ந்த வண்டுகளோடு தீதாவென்றொலித்தலான், ஆராயாதே மயங்கிப் பருவத்துக் கென்னுவியைக் கடனாகக்கொடுத்தேன்; எ-று. (௧0)

௧0௩ ஒருவந்த மன்று லுறைமுதிரா நீராற்
கருமந்தான் கண்டழிவு கொல்லோ—பருவந்தான்
பட்டின்றே யென்றி பணைத்தோளாய் கண்ணீரா
லட்டினே னுவி யதற்கு.

எ-து பருவமன்றென்று வற்புறுத்தின தோழிக்குத் தலைமகள் பருவமே யென்றழிந்து சொல்லியது.

இ-ள். ஒருவந்தமன்றால் என்பது இது பருவமென்பது மெய்ம்மை யன்றாலென்றவாறு. உறைமுதிராநீரால் என்பது மழைபெயல் நிரம்பாத

---

*"கஞ்சத்தாற் குமுதவடிவாக அணைசுபண்ணிச்செறித்தலின் ஆம்பற் குழலாயிற்று" என்பர் அடியார்க்குநல்லார் (சிலப்-ஆய்ச்சியர்குரவை)

நீராலென்றவாறு: வம்பமழை என்றவாறும். கருமந்தான் கண்டழிவுகொல்லோ என்பது கருமமாவது பருவமல்லாத பருவத்தைக்கண்டழிவதோ என்றவாறு. பருவந்தான் பட்டின்றே யென்பது பருவம் வந்து பட்டதில்லை என்றவாறு. என்றி என்பது இவையெல்லாஞ் சொல்லி என்னைத் தேற்றுநின்றாய் என்றவாறு. பணைத்தோளாய் கண்ணீரலட்டினேனுவி யதற்கு என்பது கண்ணீரே நீராக வார்த்து என்னுயிரைப் பருவத்துக்குக் கொடுத்தேன் பணைத்தோளாய்! எ-று. (கக)

கOச ஐந்துருவின் வில்லெழுதி நாற்றிசைக்கு முந்நீரை
யிந்துருவின் மாந்தி யிருங்கொண்மூ—முந்துருவி
னொன்றா யுருமுடைத்தாய்ப் பெய்வான்போற் பூக்கொன்று
கொன்றாய்கொன் றாயேற் குழைத்து.

எ-து பருவங்கண்டழிந்த கிழத்தி கொன்றைக்குச் சொல்லுவாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது.

இ-ள். ஐந்து நிறத்தினையுமுடைய வில்லையெழுதினாற்போலக் கோலி முந்நீரைப்பருகி ஈந்தின்கனிபோன்றருந்துகின்ற வுருவோடு இருங்கொண்மூ நாற்றிசைக்கண்ணும் ஒன்றா யுருமுடைத்தாய்ப் பெய்யப்படுகின்றனவானம் என்னைக்கொல்கின்றாற்போலத் தழைத்தும் பூப்பேனென்று என்னைக் கொன்றாய், கொன்றைமரமே! எ-று. (கஉ)

கOரு எல்லை தருவான் கதிர்பருகி யீன்றகார்
கொல்லைதரு வான்கொடிக ளேறுவகாண்—முல்லை
பெருந்தண் டளவொடுதங் கேளிரைப்போற் காணாய்
குருந்தங் கொடுங்கழுத்தங் கொண்டு.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். பகலினைத்தருங் கதிரோனுடைய கதிர்கள் நீரை நிலத்தின்கட் பருகியீன்ற காரானே கொல்லைகள் தருகின்ற வாலிய கொடிகண் மரந்தோறுஞ் சென்றேறுவனவற்றைக் காணாய்! அன்றியேயும் முல்லைகள் பெருந்தண்டளவுடனே குருந்தங்கொடுங்கழுத்தங்கொண்டு தங்கேளிரைப் போலேறுவன காணாய்! எ-று. (கஙு)

கOசா என்னரே யேற்ற துணைப்பிரிந்தா ரற்றென்பா
ரன்னரோ யாவ ரவரவர்க்கு—முன்னரே
வந்தாரந் தேங்கா வருமுல்லை சேர்தீந்தேன்
கந்தாரம் பாடுங் களித்து.

எ-து வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் அன்புறையெதிரழிந்து சொல்லியது.

இ-ள். என்னரே யேற்ற துணை பிரிந்தார் என்பதுஎப்பெற்றியர் அவர் தமக்கன்புபட்ட காதலரைப்பிரிந்தார் என்றவாறு. ஆற்றென்பாரன்னரோயா வரவரவர்க்கு என்பது அக்காதலித்தாரைப் பிரிந்தாரோ டொப்பர், பிரியப் பட்டார்க்காற்றி இறந்துபடாதிருக்கச்சொல்லுவார் என்றவாறு. முன்னரோ வந்தாரந் தேங்கா வருமுல்லை சேர்தீந்தேன் கந்தாரம்பாடுங் களித்து என்பது எனக்கு முன்னேவந்து சந்தனப் பொழிலையும் தேங்காவின்கண் வளர்முல் லைகளையுஞ் சேர்ந்த தீந்தேன்கள் கந்தாரமென்னும் பண்ணினைக் களித்துப் பாடாநின்றன ; எ-று. (கசு)

கoஎ கருவுற்ற காயாக் கணமயிலென் றஞ்சி
யுருமுற்ற பூங்கோட லோடி—யுருமுற்ற
வைந்தலை நாகம் புரையு மணிக்கார்தா
னெந்தலையே வந்த தினி.

எ-து பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

இ-ள். கருக்கொண்டு பூத்த காயாம்பூவினைத் தொகுதியையுடைய மயிலென்றஞ்சி உருமுற்ற ஐந்தலை நாகங்கள் உருமுற்ற பூங்கோடல்களை யொவ்வாநின்ற அழகிய இக்கார்ப்பருவந்தான், எம்முடைய மாட்டே நலிய வந்தது இப்பொழுது; எ-று. (கரு)

கoஅ கண்ணுள வாயின் முலையல்லை காணலா
மெண்ணுள வாயி னிறவாவா—லெண்ணுளவா
வன்றொழிய நோய்பொழிச்சார் வாகா துருமுடைவா
னொன்றொழிய நோய்செய்த வாறு.

எ-து பருவம் அன்றென்று வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் ஆற் றது சொல்லியது.

இ-ள் உருமுடைவான் ஒன்றொழிய நோய்செய்தவாறு கண்ணுளவா யின் முல்லையல்லை காணலாம் என்பது உருமுடைய வான் * இறந்துபா டொன்றையும் ஒழிய மற்றைக் குறிப்புக்கள் ஒன்பதும் எனக்குளவாம்

---

*இவற்றைத் தசாவத்தை என்ப வடநூலார். அவை அன்பொடு பார்த்தல், உளங்கொடுபற்றல், புணர்வு வேட்கை, துயிலறுதல், மெலிதல், புலநுகர்வொழிதல், நாணழிதல், புலம்பல், மயக்கம், இறந்துபடுதல் என இவை.

படி என்னை நோய்செய்தவாற்றை நினக்குங்கண்ணுளவாயின் *முல்லை யல்லையாதலின் நக்குக்காண் எ-று. எண்ணுளவாயின் இறவாவால் என்பது அவர் குறித்த இத்துணைநாளுள் வருகின்றேன்என்ற எண் பழுதுபடா வாயின் அவர் சொன்னநாளைக் கடவா அன்றே எ-று. எண்ணுளவா வன்றொழிய நோய் மொழிச் சார்வாகாது என்பது என்னை ஆற்றுவிக்க வேண்டி நின் மனத்தின்கண் எண்ணின எண்ணின்கணுள்ளவாவன்றி என்னேயொழிதற்கு நீ யாற்றுவிக்கின்ற மொழி எனக்குச் சார்வா காது எ-று. (கசு)

கOகூ என்போ லிகுளை யிருங்கடன் மாந்தியகார்
பொன்போறூர் கொன்றை புரிந்தன—பொன்போற்
றுணைபிரிந்து வாழ்கின்றூர் தோன்றுவர் தோன்று
ரிணைபிரிந்து வாழ்வ ரினி.

எ-து. பருவங்கண்டு ஆற்றளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். என்னைப்போன்றதோழி! பொன்போன்ற தார்களைக்கொன் றைகள் ஈனும்வகை இருங்கடலைப்பருகின முகில்களாதலாற்,பொன்போலப் பெறுதற்கரிய தந்துணைகளைப் பிரிந்துபோய் வாழ்கின்றூர் அத்துணைக்கண் மாட்டுத் தோன்றுவர்; நம்மோடிணை தலைப் பிரிந்து வாழ்கின்றூர் இப்பருவத் தின்கண்ணுந் தோன்றுகின்றிலர்; எ-று. (கஎ)

ககO பெரியார் பெருமை பெரிதே யிடர்க்கா
ணரியா ரெளியரொன் றுற்றுப்—பரிவாய்த்
தலையழுங்கத் தண்டளவந் தாநகக்கண் டாற்று
மலையழுத சால மருண்டு.

இதுவுமது.

இ-ள். பெரியாராயிருப்பார் பெருமைக்குணம் மெய்ம்மையாகப் பெ ரிதே; காணமுன்னரியாராயுள்ளார் இடர்வந்த இப்பொழுது எளியராயினு ரொன்றிரங்கி யழுங்கி ஆற்றுவாய் மலைகள் மிகவும் அழுதன, தலைசாய்க்கும் வகை பரிவாய்த்தண்டளவங்கள் தஞ்சிறுமையால் நகக்கண்டு; எ-று. (கஅ)

---

*முல்லை கண்ணிலவாதலின் என்னை நோய்செய்தவாற்றைக் காணுது நகுவன. நீயும் அதுபோல நகுவையேனும் கண்ணுண்மையால் முல்லை யல்லை யாதலின், நக்கே யொழியாது நோய்செய்தவாற்றைப் பார்த்தலும் செய்க ; எ-று. 'தண்டளவந்தானகக்கண்டு' என்பர் முன்னும்.

கககக கானங் கடியரங்காக் கைம்மறிப்பக் கோடலார்
வானம் விளிப்பவண் டியாழாக—வேனல்
வளரா மயிலாட வாட்கண்ணாய் சொல்லா
யுளராகி யுய்யும் வகை.

இதுவுமது.

இ-ள். கானங் கடியரங்காகக் கோடலார் வியந்து கைம்மறிப்ப, முகில் பாட, வண்டுகள் யாழாக வேனற்காலத்துக் களியாதமயில் களித்தாடாநிற்க வாட்கண்ணாய்! சொல்லாய்; காதலனைப்பிரிந்தார் இறந்துபடாது உளராகி யுய்யுந்திறத்தை; எ-று. (கக)

ககஉ தேரோன் மலைமறையத் தீங்குழல் வெய்தாக
வாரான் விடுவானோ வாட்கண்ணாய்—காரார்
குருந்தோடு முல்லை குலைத்தனகா ணாமும்
விருந்தோடு நிற்றல் விதி.

எ-து பருவங்காட்டித் தோழி தலைமகளை வற்புறுத்தியது.

இ-ள். பகலோன் மலையின்கண் மறைய இனியகுழல் இன்னாதாய் வெய்தாக இக்காலத்தின்கண் வாராதேவிடுவானோ; வாட்கண்ணாய்! பசுமை யார்ந்த குருந்துடனே முல்லைகள் பூங்கொத்தையீன்றனகாண்; இனிநாமும் அவர்க்கு விருந்துசெய்தல் ஒழுகிநிற்றல் நெறி; எ-று. (உ0)

ககங பறியோலை மேலொடு கீழா விடையர்
பிறியோலை பேர்த்து விளியாக் கதிப்ப
நரியுளையும் யாமத்துந் தோன்றரா லன்னாய்
விரியுளைமான் றேர்பேல்கொண் டார்.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். படுத்துத்துயிலும் பறி *கீழாக ஓலைப்படன் மழைத்துளியை க்காத்தற்கு மேலாக இடையர்கள் கிடந்து யாடுகளைப் பிரித்தற்குக் கருவி யாகிய பிறியோலையைப் புடைபெயர்வித்து அழைத்துரப்ப, நரிகள் அஞ்சிக்

* 'பறியோலைச்சயனத்தர்' எனப் பெரியாரும் பணித்தார். (பெரியாழ்வார்திருமொழி, வண்ணமாடங்கள், ரு) 'மறித்துருத் தொகுத்த பறிப்புற விடையன்' என அகநானூற்றினும் (கச) 'பறிப்புறத் திட்ட பாலுடை யிடையன்' என நற்றிணையினும் (கசஉ) வருதல்காண்க.

கதறும்யாமத்தின்கண்ணுந் தோன்றாராற் றோழி! விரிந்தஉளையையுடைய மாவாற்பூட்டப்பட்ட தேரைமேல்கொண்டுபோயினர்; எ-று. (உக)

ககச பாத்துப் படுகடன் மாந்திய பல்கொண்மூக்
காத்துக் கனைதுளி சிந்தாமைப்—பூத்துக்
குருந்தே பருவங் குறித்திவளை நைந்து
வருந்தேயென் றாய்நீ வரைந்து.

எ-து பருவங்கண்டழிந்த தலைமகன்கேட்பத் தோழி குருந்தமரத்திற்குச் சொல்லுவாளாய்ப் பருவமன்றென்று வற்புறுத்தியது.

இ-ள். ஒலிக்கின்ற கடலைப்பருகி அந்நீரைக்காத்துக் கருமுற்றிப்பகுத்துச்செறிந்ததுளிகளைச் சிதறுவதற்குமுன்பேபூத்துக் குருந்தே!பருவத்தைக் குறித்துக்காட்டி இவளையேவரைந்து வருந்துவாய் என்றாய் நீ; எ-று. (உஉ)

ககரு படுந்தடங்கட் பல்பணைபோல் வான்முழங்கன் மேலுங்
கொடுந்தடங்கட் கூற்றுமின் னாக—நெடுந்தடங்கண்
ணீர்நிறை நோக்கி நெடும்பணைமென் றோளாட்குத்
தேர்நின்ற தென்னுய் திரிந்து.

எ-து வினைமுற்றிமீண்ட தலைமகன் தலைமகட்கு தூதுவிடுகின்றன் றூதிற்குச் சொல்லியது.

இ-ள். ஒலியாநின்ற தடங்கண்ணையுடைய பலமுரசுபோல் முகில்கள் முழங்குவதன்மேலும் மின்னே கொடியதடங்கண்ணினையுடைய கூற்றமாக அழுகின்றநீர்விடாது நின்ற நெடுந்தடங்கண்ணேக்கினையுடையநெடும்பணைமென்றோளாட்கு நீமறித்துவந்து நின்மனைவாயிலின்கண்ணே அவன்றேர்நின்றதென்று சொல்லுவாய், எமக்குமுன்னே சென்று தூதாக; எ-று.()

ககசு குருந்தே கொடிமுல்லாய் கொன்றாய் தளவே
முருந்தே யெயிறொடுதார் பூப்பித்—திருந்தே
யரும்பீர் முலையா ளணிகுழலூழ் வேய்த்தோள்
பெரும்பீர் பசப்பித்தீர் போர்ந்து.

எ-து. பருவங்கண்டு ஆற்றளாய தலைகள்ஆற்றல்வேண்டித் தோழி தான் ஆற்றளாய்ச் சொல்லியது.

இ-ள். குருந்தே! கொடிமுல்லாய்! கொன்றாய்! தளவே! பீலிமுருந்தினையொக்கும் இவளெயிற்றுடனே பூமாலையையும் பூப்பித்திருந்து கோங்கரும்

பு முதலாயினவற்றை வென்று சிதைக்கும் முலையினையுடையாளுடைய குழலுழ்ந்த நிறைந்தவேய்த்தோள்களைப் பெரும்பீர்நிறம்போலப் பசப்பித்தீர் மீட்டும்; எ-று. (உச)

ககஎ. கதநாகம் புற்றடையக் காரேறு சீற
மதநாக மாறு முழங்கப்—புதனாகம்
பொன்பயந்த வெள்ளி புறமாகப் பூங்கோதா
யென்பசந்த மென்றோ ளினி.

எ-து தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

இ-ள். சினத்தினையுடைய பாம்புகளும் புற்றினை அடையும்வகை உருமேறு வெகுண்டிடிப்ப, மதத்தையுடைய யானைகள் அவ்வுருமேற்றுக்கு எதிரேமுழங்கப், புதலாற்சூழப்பட்ட நாகமரங்கள் வெள்ளிபோலும் இதழ்கள்புறஞ்சுற்றப் பொன்போலுந்தாதுக்களை உள்ளே பயந்தனவாதலாற் பூங்கோதாய்! நின்மென்றோள்கள் யாதுகாரணத்தாற் பசந்தன இப்பருவத்து; எ-று (உரு)

ககஅ கார்தோன்றிப் பூவுற்ற காந்தண் முகைவிளக்குப் [றித்
பீர்தோன்றித் தூண்டுவாண் மெல்விரல்போ—னீர்தோன்
தன்பருவஞ் செய்தது கானந் தடங்கண்ணு
யென்பருவ மன்றென்றி யின்று.

எ-து பருவம் அன்றென்று வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் வன்புறை யெதிரழிந்து சொல்லியது.

இ-ள். விளக்குமழுங்கிப் பீர்நிறங்கோடலான் அவ்விளக்கினைத்தூண்டுவாள் மெல்விரலினைத் தோன்றிப்பூவின்மேற் சென்றன காந்தண்முகைகள் போலும்வகை கார்நீர்தோன்றுதலாற் காரின் பருவத்தைச் செய்தன கானங்கள், இத்தைக்கண்டும் தடங்கண்ணாய்! எனக்குக் காதலர் சொல்லிய பருவம் அன்றென்னுநின்றி; எ-று. (உசு)

கககூ. உகவுங்கா ரன்றென்பா ரூரா ரதனைத்
தகவுந் தகவன்றென் றோரோன்—றகவேகொல்
வண்டுடுப்பாய்ப் பாம்பாய் விரலாய் வளைமுரியாய்
வெண்குடையாந் தண்கோடல் வீந்து.

இதுவுமது.

இ-ள். மழைத்துளிகள் உகவுங் கார்ப்பருவம் அன்றென்று சொல்லாநின்றார் இவ்வூரார்: அச்சொலவுதான் அவர்க்குக்குணமோ குற்றமோ என்ப

தறியேன்: அதுதான் அவர்க்குக் குணமேகொல்லோ! வளவிய துடுப்பாய்ப் பாம்பாய் விரலாய் வளைமுரியாய்வெண்குடையாகாநின்றது தண்கோடலழி ந்து; எ-று. (உஎ)

கஉ0 பீடிலா ரென்பார்கள் காணார்கொல் வெங்கதிரார்
கோடெலாம் பொன்னாய்க் கொழுங்கடுக்கைக்—காடெலா
மத்தங் கதிரோன் மறைவதன்முன் வண்டொடுதேன்
றுத்த மறையுந் தொடர்ந்து.

இதுவுமது.

இ-ள். நம்மைப்பெருமையிலரென்று சொல்லுவார் காணாதாராகாரே! வளவிய கொன்றைகள் கொம்பெல்லாம் பொன்னாகப் பூக்க வண்டோடு தேன்கள் துத்தம் என்னும் பண்ணினைத் தம்முட் பொருந்தி ஒலியாநின் றன காடெல்லாம்; வெய்யகதிரோடுகூடி வெங்கதிரோன் அத்த மலையை அடைதற்கு முன்னே; எ-று. (உஅ)

கஉக ஒருத்தியா னென்றல பல்பகை யென்னை
விருத்தியாக் கொண்டன வேறாப்—பொருத்தின்
மடலன்றின் மாலை படுவசி யாம்பல்
கடலன்றிக் காரூர் கறுத்து.

இதுவுமது.

இ-ள். யானொருத்தி: எனக்கு ஒன்றல்ல பலபகைகள் என்னை மலைத் தலை தமக்கு ஒழுக்கமாகக்கொண்டன; வேறாகத் துணையைப் பிரிந்து பொ ருந்தின் மடற்பனைமேலிருந்த அன்றில், மாலைப்பொழுது, மழைபெயல் ஆம்பற்குழல், கடல் அன்றியே முகில்கள் என்று சொல்லப்பட்ட இவை யெல்லாம் மேல் வெகுண்டு; எ-று. (உகூ)

கஉஉ கானந் தலைசெயக் காப்பார் குழற்றோன்ற
வேன மிடந்த மணியெதிரே—வான
நகுவதுபோன் மின்னுட நாணவென் னாவி
யுகுவது போலு முடைந்து.

இதுவுமது.

இ-ள். காடுகள் தழைத்துத் தலையெடுக்க ஆயர்ஊதுங் குழலோசை தோன்ற ஏனங்கள் இடந்த மணிகளினெதிரே முகில்கள் சிரிப்பதுபோல மின்கள் ஒளிவிட இக்காலத்தும் இறந்துபடாமையான் நாணில்லாத என்னு யிர் ஒழுகுவதுபோல்வுளது; எ-று. (ங0)

இம்மூன்றில் முதலனுஷ்டானம் திருப்தியானதன்று. ஏனெனில், எருவைக்குவியல்களாகச் சிலகாலம் கொட்டிவைப்பதில் அதன் சத்துக்கள் ஆகாயத்திற்பறந்து போவதோடு, அதன் அடியிலுள்ள சத்துக்களும் அந்த ஒரே இடத்தில் ஊறிஇறங்கி நிலத்தைக் கெடுத்துக் கையினல் எடுத்து வீசுவதற்கும் கஷ்டமாகும். இரண்டாவது அனுஷ்டானத்தினல், சாய்ப்பான நிலங்களிற் பரக்கத்தூவின், எருவை மழைமாரிவெள்ளங்கள் கொண்டுபோகவும், எருவிலுள்ள அமிலம் ஆகாயத்திற் பரக்கவும்கூடும்; ஆயினும் பயிர்செய்வதற்கு அடுத்த தினங்களில் எருவைப் பரக்கத்தூவி உடனே மேலாக அஃதாவது நான்குஅங்குல ஆழத்திற்குமேற்படாமல் உழுது மண்ணேடு கலக்கிவிட்டால் எருவின் சத்து அதிகமாக நஷ்டப்படாது. மூன்ருவது-நிலமுழுதுக்கும் வேண்டிய எருவில்லாதவர்கள், நன்ருக மக்கினபழைய எருவை எடுத்து விளைக்கும்போது உழுச்சாலில் குறைவாகப்போட்டால் நன்மைசெய்யும்; அதிகமாகப்போட்டால் உருளைக்கிழங்குகளைப்போன்ற சிலபயிர்களின் வேர்கள் தீய்ந்துபட்டுப்போம். புத்தெருவானது தூண்டுதலையுடைய வஸ்துவாகையால், செடிகளுடைய தண்டுகளையும், இலைகளையும் அதிகமாக மதாளிக்கச்செய்து விருத்தியாக்கிப்படரச்செய்யும்; ஆகவே அதைப்பழந்தரும் மரங்களுக்கும், தானியந்தரும் பயிர்களுக்கும் உபயோகப்படுத்தினல் இலைகளையும் தண்டுகளையும் வளமாக்கிப் பழங்களையும் தானியவிருத்தியையும் கொடுத்துவரும். ஆகவே, புதுஎருவை விரைவில் விளைக்கவேண்டிய புல்தட்டுமுதலான கால்நடைத் தீனிப் பயிர்களுக்கு உபயோகப்படுத்துதல் நலம்.

மேலும் தானியம், புகையிலை, கரும்பு, உருளைக்கிழங்கு முதலான பயிர்களுக்கு (அப்போதே) நேராக அவைகளுக்கென்று எருவைப் போடுவதைப் பார்க்கிலும், அப்பயிர்கள் விளைவிக்கும் நிலத்தில், அப்பயிர்களுக்கு முந்திப்பயிரிட்ட பயிர்களுக்கு நல்ல எருவிட்டு உண்டாக்கி, அறுத்தபிறகு, அந்தப்பழைய எருவின் ஆதாரத்தைக் கொண்டு கரும்பு புகையிலை முதலியவற்றைப் பயிரிட்டால் அதிக நன்மையை யுண்டாக்கும். இந்தவழக்கம் நமதுநாட்டின் சிலபாகங்களில் நடந்து வருகிறது. அதாவது புகையிலை பயிரிட விரும்பும்

நிலத்தில் முன்னதாக நல்ல எருவிட்டு அதில் இராகி கேழ்வரகைப் பயிரிட்டு அதை அறுத்தபிறகு அந்தநிலத்தில் புகையிலைப்பயிர் செய்தால் நோய் காளான் முதலானவையன்றி நன்ருக விளைவதைக் கண்டதுண்டு. நிலத்திற்கு எருவிடுவதில், காலதேசத்தையும் அனுசரித்தல்நலம். மழைக்காலத்தில் நிலத்தில் நீர் அதிகமாகத்தங்குமாகையால், அக்காலத்திற் புதுஎருவையும், நிலத்திலேயே மக்கிப் போகும்படியான காய்ந்த எருவையும் போடலாம். உஷ்ணகாலத்தில், அதிகமான எருவையும், நன்ருக மக்கினதல்லாத எருவையும் போட்டால் பயிரைச்சுட்டுவிடும். பனிக்காலத்தில் (காலம் சிறிதானபடியால்) நன்ருகமக்கிப் புளித்துப்பக்குவமான எருவைப்போட்டால் நன்மையையடையலாம்.

ஒவ்வொரு நிலத்துக்கும் ஒவ்வொருபயிருக்கும் எவ்வளவு எருப்போடவேண்டுமென்று சிலர்கேட்கக்கூடும். அதற்கு விடையாவது அந்தந்த நிலத்துக்கும், காலத்துக்கும், பயிருக்கும் தக்க எருப்போடவேண்டுமென்று சொல்லலாமேயொழிய திட்டமாகச் சொல்ல முடியாது. ஏனெனில் குளிர்ந்த ஈரப்பசையுள்ள நிலத்துக்கு அடிக்கடி கொஞ்சங் கொஞ்சமாக எருப் போட்டாற் போதும். ஏகர் ஒன்றுக்கு 17 முதல் 18 டன் எருப் போடுதல் அதிகமென்றும், 14 டன் சரியானதென்றும், 8 முதல் 9 டன் போடுதல் குறைந்ததென்றும், ஒரு ஜர்மனி கிருஷி சாஸ்திரி சொல்லுகிருர். மற்ருெருர் சாஸ்திரியார் 7 முதல் 10 டன் எருக் குறைந்ததென்றும், 12 முதல் 18 டன் போதுமானதென்றும், 20 டன் அதிகமென்றும், 30 டன் மிதமிஞ்சியதென்றும் சொல்லுகிருர்.

ஸ்டிவின்சன் சாஸ்திரியார் (Dr. Stephens) கிழங்கு வகைப் பயிர்களுக்கு 8 முதல் 12 டன் எருவும், உருளைக்கிழங்குகளுக்கு 15 முதல் 20 டன் எருவும் போடவேண்டுமென்று சொல்லுகிருர். கோதுமை, பார்லி முதலான சிலதானியப்பயிர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ஒரு ஏகருக்கு 14 டன் எருவிடல் அதிகமென்று கில்பெர்டு (Sir Henry Gilbert) சாஸ்திரியார் சொல்லுகிருர். அமெரிகாவில் 6 முதல் 12 டன்னும் நியுஜெர்சியில் (New Jersey) 20 டன்னும் உபயோகித்துவருகிருர்கள். ஒரேகாலத்தில் அதிகமான எருவை

நிலத்துக்கிடுவதைப்பார்க்கிலும், இடைக்கிடைப் பயிர்களைக்கொத்தி மண்ணணைக்கும்போது சிறிது சிறிதாக எருவிட்டு வருவதில் அதிக நன்மை செய்வதைக்கண்டதுண்டு.

முடிவுரை.

இதுவரையில் எடுத்துக் காட்டிய இந்த விவசாய ரசாயன சாஸ்திரச் சுருக்கத்தினுல், நமதுநாட்டின் நிலத்தில் நெடுங்காலமாகத்தக்க எருவிடாமற் பயிர் செய்து வந்ததனுல், நிலத்தின் உரங்கெட்டு, நல்ல விளைவு உண்டாகிறதில்லை யென்றும், அதனுல் அடிக்கடி கடும் பஞ்சங்கள் சம்பவித்து குடிகளைக் கஞ்சிக்குத் தவிக்கும்படி செய்து விடுகிறதென்றும், ஐரோபா அமெரிகா நாட்டார் தத்தம் நிலத்தின் உரம் கெட்டுப்போகுங் காலத்தில் அந்நிலத்துக்கு இன்றியமையாத் தொழுஎருவையும் விசேஷக்கலப்பு எருவையுங்கலந்துபோட்டு உரங் கெடாதபடிபாதுகாத்துவருவதனுல், நல்லவிளைவைப்பெற்றுக்குபேர சம்பத்துடன்வாழ்ந்து வருகிருர்கள் என்றும், அதற்காகநவநவமாகக் கருவிகளைக் கொண்டு இரசாயன சாஸ்திரப்படி பரிட்சித்து வருகிருர்கள் என்றும் ஸ்பஷ்டமாகும். ஆகவே எருவிடுதல் என்ருல் ஒரு நிலத்தில் வேளாண்மை செய்வதனுல் அந்தநிலத்திலிருந்து குறைந்த அல்லது எடுபட்டுப்போனசாரம் அல்லது உரத்தை மறுபடியும் அந்த நிலத்தில் உண்டாகும்படி செய்யும் உபாயமெனத் தெற்றென விளங்கும். இதுநிற்க.

ஆரிய நாட்டாராகிய இத்தேசத்துக் குடியானவர்களிற் சிலர் கேவலம் கண்ணேக்கத்தினுலேயே இது பருத்தி விளையக்கூடிய நிலம், இது புகையிலை விளையக் கூடிய நிலம், இது கரும்பு விளையக்கூடிய நிலம்'' இது கம்பு சோழம் விளையக்கூடிய நிலம், இது கோதுமை நெல் விளையக்கூடிய நிலம் என்று புராதன அனுபவத்தைக் கொண்டு சொல்லி வருவதும், சொல்லியபடி செய்துவருவதும் வழக்கமாக இருக்கின்றன. ஐரோபா அமெரிகா நாட்டாரும் ஆதியில் இப்படியே தான் நம்பிப் பயிர் செய்து வந்ததில்; அஃது அனுபவத்துக்கு இசைந்து வாராமையினுற் கேவலம் பார்வையினுல் நம்பிப் பயிரிடுவதிற் குறைகள் சம்பவிக்கிறதைக் கண்டு சாஸ்திரோக்த

ப்படி விசாரிக்கத்தலைப்பட்டார்கள். அப்படிச் செய்யவே இன்ன ஸ்திதியிலிருக்கும் நிலத்தின் மண், இன்னின்னபயிர்களுக்கு உபயோகப்படும் என்று கண்டறிந்தார்கள்.

எப்படியெனில், ஒரு நிலத்தின் சூக்ஷமவீக்ஷணி அல்லது பூதக்கண்ணாடியின் உதவியினால் எண்ணித்தெளிகிறார்கள். அதாவது ஒரு நிலத்தின் (ஒரு திராம் அல்லது அரைக்காலே அரைவீசம் ரூபா எடையுள்ள) மண்ணில் 6,80,00,00,000 அணுக்கள் இருந்தால் அந்தமண் தோட்டக்கால் பயிர் செய்யத்தக்க மண் என்றும், 1,00,00,00,000 அணுக்கள் இருந்தால் அது கோதுமைப்பயிர் செய்வதற்கேற்ற மண் என்றும், 8,00,00,00,000 அணுக்கள் இருந்தால் அது புகையிலைப்பயிர் செய்வதற்குத்தக்க மண் என்றும், 2,40,00,00,00,000 அணுக்களிருந்தால் புல் விளைவதற்குத்தக்க மண் என்றும், 4,70,00,00,000 அணுக்கள் இருந்தால் அது அதிக ஏழமைத் தரமான மண் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அன்றியும், அந்தந்த நிலத்திற்கும், பயிர்களுக்கும்பாயும் தண்ணீரையும் தக்கபடி முன்னதாகப் பரிசோதிக்கிறார்கள். தண்ணீரில் அநேக தாதுவர்க்கங்கள் கலந்திருப்பதாக முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா? சில இடங்களில் உள்ள நீர் பயிர் பச்சைகளுக்கு வேண்டிய எருவைப்போல உபயோகப்பட்டுவருகிறது. கிராமநத்தங்களில் இருக்கும் சில கிணறுகளின் ஜலத்தில் உவர்ப்பு பாகம் அதிகமாக இருப்பதால் அது புகையிலை முதலிய சில பயிர்வகைகளுக்கு அதிக உபயோகமுள்ளதாகவிருக்கிறது. உப்புபாகம் அதிகமாக இருக்கும் ஜலம் நிலத்தைக் களராக்கிவிடும். சிலவிடங்களிலுள்ள ஜலம் சப்பைஜலமாகவிருந்து பயிர்பச்சைகளுக்குப் பிரயோஜனப்படமாட்டாது. ஆகவே ஒவ்வொருவிதமான ஜலத்தையும் சாஸ்திரயுக்தப்படி பரீக்ஷித்துப்பார்த்து வருகிறார்கள். இப்படி ஒவ்வொரு ஜாதி மண்ணிலும், ஜலத்திலும், முன்னதாக சோதித்து, அதில் மிதமிஞ்சியிருக்கும் சத்துப்பொருள்களைக் குறைத்தும், குறைந்திருக்கும் பதார்த்தங்களைக் கொடுத்தும் திருத்தி உரமாக்கி அந்த உரத்துக்குத்தக்கப் பயிர்களைப் பயிரிட்டுவருகிறார்கள்.

இந்த சாஸ்திரவிதியை அனுசரித்தே இப்போது கோயம்புத்தூர் ஸ்டேன்சு கம்பெனியார், ஒரு பெரிய எருச்சாலையை ஸ்தாபித்து அதில் அநேக இயந்திரங்களின் உதவியினல் நெல், கோதுமை, சோளம், ராகி, பருத்தி, கரும்பு, புகையிலை, மிளகாய், நிலக்கடலை, நீலி, மஞ்சள், வாழை, காப்பி, தேயிலை முதலிய பயிர்களுக்கேற்ற சேர்க்கை எருவைத் தயார்செய்து விற்றுவருகிறார்கள். இந்தச்சேர்க்கை எருவின்விலை அதிகமாயும், அதை வாங்கும்படியான குடித்தனக்காரர்கள் அதிக ஏழைகளாயும் இருப்பதோடுகூட; இந்தஎருவை வாங்கிப்போடும் நிலத்தின் குணமும், அதற்குப் பாய்ச்சும் ஜலத்தின் குணமும் இன்னதென்று அறிய சக்தியற்ற சுதேச ஏழைக்குடிகள் "இந்த இங்கிலீஷ் எருவை வாங்கிப்போட்டால் பழக்கத்தில் விளையும் பயிரும் விளையாமற்போகுமோ"வென்று பயந்து விசேஷமாக வாங்கி உபயோகிப்பது அபூர்வம்.

இத்தேசத்தில் வேளாண்மைசெய்யும் நிலமும் ஜலமும், இடத்துக்கு இடம் வித்தியாசப்பட்டிருப்பதால், அந்தந்த நிலத்தையும் ஜலத்தையும் தக்கபடி பரிசோதித்து அவைகளில் மிதமிஞ்சியிருக்கும் சத்துப்பொருள்கள் இன்னவையென்றும், குறைந்திருக்கும் பொருள்கள் இன்னவையென்றும் கண்டுபிடித்துத் தக்கபடி திருத்த வேண்டியது முதற்கடமையாகும். இக்கடமையை இப்போதிருக்கும் சுதேசக்குடிகளாற் செய்துமுடிக்க ஏலாது; ஆகவே, இப்போது நமது கவர்ன்மெண்டார் நவீனமாக விவசாயவிருத்திவிஷயமாய் நியமித்திருக்கும் சாஸ்திர நிபுணர்களான உத்தியோகஸ்தர்களைக்கொண்டு முடிப்பித்தால், மிக்க சுகிர்தமுண்டாகுமென்பது திண்ணம்.

இனி இந்நாட்டில் விளையும் எந்தெந்தப் பயிர்களுக்கு எந்தெந்த விசேஷ எருக்கள் இன்றியமையாதவையென்று சங்கிரகமாகக்காட்டும் குறிப்புப் பட்டியை இதனடியிற் காட்டுகின்றோம்.

எந்தெந்தப் பயிர்களுக்கு எந்தெந்த விசேஷ எரு வேண்டுமென்பதைக்காட்டும் சங்கிரகமான குறிப்பு.

பயிர்வகைகள்.	எருவகைகள்.
புல் வகுப்பைச் சார்ந்த நெல், கோதிவாற்கோதுமை, சோளம், கம்பு, ராகி, தினை, வரகு, சாமை, குதிரைவால், மக்காச்சோளம் முதலிய தானியப் பயிர்களுக்கு.	ஆடுமாடுகளின் தொழுஎருவோடு எலும்பின் சத்தான பாஸ்கரமும் உப்புவாயுவு முக்கியமாகவேண்டும்.
கோது அல்லது புரணியால் மூடப்பட்டிருக்கிற அவரை, துவரை, மொச்சை. கடலை, கொள், காராமணி, பாசிப்பயிர், உழுந்து, பட்டாணி, பீனிசுகொட்டை, தம்மட்டன், தட்டப்பயிறு, கொத்தவரை கொடுக்காபுளி, எள், புன்கு, புளி, நிலக்கடலை, அவிரி, அகத்தி, வாதநாராயணம் முதலியவைகளுக்கு.	மற்ற எருவுடன் சுண்ணம்பு எரு முக்கியமாக வேண்டும்.
இலைகாய், கறிப்பயிரான கீரை வகைகள், காய்கறிகள், சுரை, வெள்ளரி, பூசணி, கர்பூஜ், தர்பூஜ், மரு, மருக்கொழுந்து பல வித குரோட்டன் செடிகளுக்கு.	மற்ற எருக்களோடு நவச்சாரசத்து எரு முக்கியமாகவேண்டும்.
கிழங்கு வகைப் பயிரான உருளைக்கிழங்கு, சேனை, கருணை, வள்ளி, மஞ்சள், மரவள்ளி, வெற்றிலை, வெங்காயம், பூண்டு, அரரொட்டி, வேர்க்கடலை முதலியவைகளுக்கு.	ஆழ்ந்த உழவுபோட்டு மண்ணைப் புரட்டி மக்கவிட்டு, மற்ற எருக்களோடு சாம்பற்காரம் முக்கியமாகவேண்டும்.
வெல்லச்சர்க்கரையைத் தரும்பயிரான பனை, தென்னை, ஈச்சம், கரும்பு, சவ்வரிசி பீட்டுரூட் முதலியவைகளுக்கு.	ஆள் உழவினால் மண்ணைப்புரட்டி மக்கச்செய்து மற்றுத் தொழு எரு விடவேண்டும்.
எண்ணெயைத்தரும் பயிரான ஆமணக்கு, எள், புன்கு, வேம்பு, தேங்காய், புன்னை, கடுகு, இருப்பை, காட்டாமணக்கு, பருத்திக்கொட்டை முதலியவைகளுக்கு.	ஆள் உழவினால் மண்ணைப்புரட்டி மக்கச்செய்வதும் சாம்பற்காரமும் முக்கியமாகவேண்டும்.

நார்வகைப்பயிரான, பருத்தி, சணல், புளிமஞ்சி, கத்தாழை, மருது, தாழை ஆளி விதை முதலியவைகளுக்கு.	ஷை
வர்த்தகப்பயிரான புகையிலை, மிளகாய் கத்திரி, திராக்ஷை, மணத்தக்காளி, உருளைக்கிழங்கு, பெல்டோனு, ஊமத்தன் முதலியவைகளுக்கு.	ஷை-ம் சாம்பற்காரமு முக்கியமாக வேண்டும்.
கந்தக சத்துள்ள முள்ளங்கி, முட்டைகோஸ், காளிப்பிளவர், நூல்கோல், நெல், கடுகு, வேளை முதலியவைகளுக்கு.	மற்ற எருக்களுடன் கந்தகசத்து முக்கியமாக வேண்டும்.
புஷ்பம், பழம்தரும் பயிர்களான மா, பலா, வாழை, அத்தி, ஆரஞ்சு, கிச்சலி, கொய்யா முதலாய பழந்தரும் செடிகளுக்கும், மல்லிகை, முல்லை, ஜாதி, இருவாட்சி, பாதரி, பன்னீர், ரோஜா, சண்பகம், முதலிய புஷ்பச்செடிகளுக்கும்.	மற்றத்தொழு எருவுடன், எலும்பின் சத்தான பாஸ்கரம் என்னும் சத்தும் முக்கியமாகவேண்டும்.

இப்படி இந்நாட்டில் விளைவிக்கும் சில விசேஷப் பயிர்களுக்கு இன்றியமையா விசேஷ எரு இன்னவை இனியவை என்று மேற்காட்டிய பட்டியினுல் ஒருவாறு சங்கிரகமாகக் காட்டியிருப்பினும் இந்த விசேஷ எருக்களை இட இஷ்டமுள்ளவர்கள், தாம் எருவிட விரும்பும் மண்ணிலும், அதற்குப்பாய்ச்சும் ஜலத்திலும் எந்தெந்த விசேஷ எருக்கள் மிதமிஞ்சியோ அல்லது குறைந்தோ இருக்கிற விவரத்தை முன்னதாகத்தெரிந்து உரமாக்குவது உத்தமம்.

இது விஷயமாக நான் முன்னமே பதிப்பித்திருக்கிற விவசாயம் அல்லது கிருஷிசாஸ்திரசாரசங்கிரகத்தையும், இனி மதுரைத்தமிழ்ச் சங்கத்தார் பதிக்க அங்கீகரித்துக்கொண்டிருக்கிற கிருஷிசாஸ்திர சங்கிரகத்தின் இரண்டாம்பாகத்தையும் படித்துப்பார்த்து அவைகளிற் சொல்லியிருக்கிறபடி நிலத்தைத் திருத்திப் பயிரிட்டால் நல்ல பலனை யடையலாம்.

விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்.

முற்றியது.

விளம்பரம்.

ஒருமுறை பாருங்கள்.

மதுரை கீழமார்க்கட்டுத்தெருவில் நம்முடைய ஜவுளிமாளிகையில் கொற்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம் காஞ்சீபுரம், பனுபசு, உள்ளூர் முதலிய தினுசுகளும் பங்காளத்திலிருந்து பலவிதமானநார்ப்பட்டு, வெண்பட்டுதினுசுகளும், நூதனமாய் அச்சிடப்பட்ட புதுச்சேரித்துண்டுகளும்; பற்பல உபயோகமுள்ள நாகரீக ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லறையாகவும் கரூர்விலையாக விற்கப்படும். துலை வியாபாரிகளுக்கு ஜவுளி தினுசுகள் வேண்டிய மாதிரியில் உடனேயும் பத்திரமாயும் தபால் வாலியூபேயபிள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின் ஜாப்தா கேட்பவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவ்தர்,

டி. லட்சும்மண பாகவதர்,

கரூர் ஜவுளிக்கடை மதுரை.

தயவு செய்து தங்களுடைய சிநேகிதர்களுக்கு தெரிவியுங்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பிற்குச் சங்க அங்கத்தினர் செலுத்த வேண்டிய வருட 'சந்தா' ரூ. 6-யும் அன்புற்றனுப்பிய வித்வான்கள்.

---

1. யாழ்ப்பாணம்-நா. கதிரைவேற்பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், வெஸ்லியன்மிஷன் காலேஜ், இராயபேட்டை, சென்னை.
2. M. முத்துராமலிங்கம் பிள்ளையவர்கள், B. A., தலைமைத் தமிழ்ப்பண்டிதர், மகாராஜா காலேஜ், திருவனந்தபுரம்.
3. N. V. சுந்தரராஜையரவர்கள், B. A. L. T., பிளீடர், இராமநாதபுரம்.
4. வீராசாமி ஐயங்காரவர்கள், சம்ஸ்தான வியாகரணவித்துவான், எட்டயபுரம்.
5. த. கைலாசபிள்ளையவர்கள், மானேஜர், சைவப்பிரகாசவித்தியாசாலை, யாழ்ப்பாணம்.
6. கே. ஜி. சேஷையரவர்கள், B. A. B. L., ஹைகோர்ட்வக்கீல், திருவனந்தபுரம்.
7. J.M. நல்லசாமிப்பிள்ளையவர்கள் B. A. B. L., டிஸ்டிரிக்ட்முன்சீப், சேலம்.
8. M. K. அப்துல்காதிறு ராவுத்தரவர்கள், ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட், இளையான்குடி.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்

விற்கப்பெறும் புத்தகங்கள்.

1. ஞானாமிர்தம் மூலமும் உரையும்.

இது ஸ்ரீ கைலாயபரம்பரை நிறைந்தநாடனார் சந்தானத்துப் பரமானந்த முனிவர் அருள்பெற்ற வாகீசமுனிவர் இயற்றியருளியது. மூன்றடிச்சிறுமையும் ஐம்பத்தாறடிப் பெருமையுமுள்ள அகவற்பா எழுபத்தைந்துடையது. வீடுகாதலிக்கும் நல்லறிவினர்க்குச், சிவாகமங்களுட் கூறப்படுவனவாய சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்குபாதங்களுள்ளே ஞானபாதத்துக்குரிய பதிபசுபாசங்களி னியல்பை நியாயவாயிலான் உணர்த்தி வீடெய்தும் உபாயங்கூறுவது. சொல்வளம் பொருள்வளங்களாற் கற்போர்நெஞ்சங் காமுறச்செய்வது. ஸ்ரீ கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து மாதவச்சிவஞானயோகிகளாற் சிவஞான போதவுரை முதலியவற்றில் மேற்கோள்காட்டப்பெற்றது. இத்தகைச் சிறப்புவாய்ந்த இந்நூல் இதன் பழைய உரையுடன் திருவாவடுதுறையாதீன வித்துவானும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரவர்களாற் பலபிரதிகளைக் கொண்டு பரிசோதித்து விசேடக் குறிப்புக்களுடன் அச்சிடப்பெற்று, இப்போது முடிந்துள்ளது. இது சங்கப்பிரசுரங்களுள் முதலாவதாகும். இதன்விலை ரூ 1.

2. சைவமஞ்சரி.

இது மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தாபகரும், அக்கிராசனாதிபதியுமான ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களாற் றொகுக்கப் பெற்றது. முன்னர் யாவர்க்கு முபயோகமாகத் தேவரவர்களால் வெளியிடப்பெற்ற ‘பன்னூற்றிரட்டுப்’ போல, சைவசமயிகட்குப் பெரிதும் பயன்படுமாறு, கடவுள்வாழ்த்து, பதி, பசு, பாச முதலாய அதிகாரவடைவுடன் இப்போது பிரசுரிக்கப்பெற்றது. அறுபத்தேழு சைவநூல்களினின்று (அஃதாவது 108399 - செய்யுள்களினின்றும்) ஆராய்ந்தெடுக்கப்பெற்ற 1316-செய்யுண்மலர்களுடையது. சமயஞானமுறவிரும்புவோர்க்கும், பிரசங்கிகட்கும், தவறாது கையிலிருந்துகமழத்தக்கது. நூற்குமுன்னும் பின்னும் பல விசேடக்குறிப்புக்கள் அமைந்தது. இத்தமிழ்ச்சங்கத்தின் இரண்டாம் பிரசுரமாவது. இதன் விலை ரூ $1\frac{1}{2}$.

☞ மேலேகாட்டிய புத்தகங்கட்குத் தபால் சார்ஜ் பிரத்தியேகம். இவை பெறவிரும்புவோர் **மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜர்** அவர்கட்கெழுதி வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.